Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 23 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 14 (07.01.2004) புதன்கிழமை இதழ்:98

இன்றைய அறிமுகம்! நாளைய நாகரீகம்!!

மகாராசி சில்க்ஸ்



- சல்வார் கிற்
- இந்தியன் சாறி வகைகள்
- மற்றும் சிறுவர், சிறுமியருக்கான றெடிமேட் ஆடைகள்

அனைத்திற்கும் நாடவேண்டிய இடம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்

T.P No - 0777286247

(ச-1879)

## நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர் இன்று திருமலை செல்கிறார்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று திருகோணமலைக்கு செல்கின்றார்.

இவ்வாறு செல்லும் இவர் இன்று காலை பத்துமணிக்கு திருகோண மலை மாவட்டச் செயலகத்தில், திருமலை மாவட்டத் திலுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச தன்னார்வத்தொண்டர் நிறுவனங்களைச் சந்தித்து, அவர்களது செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளார்.

நாளை மதியம் திருகோணம லையின் மூதூர் பகுதியிலுள்ள சம்பூரில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன் மற்றும் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரைச் சந்தித்து மாவட்டத்தின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடவுள் ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தர் அலுவலகத்தைப்பூட்டி யாழ். பல்கலை ஊழியர் மறியற் போர்!

### கோரிக்கை நிறைவேற்றும்வரை தொடருமென அறிவிப்பு

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் அலுவலகத்தைப் பூட்டி ஊழியர் சங்கத்தினர் நேற்று மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர். தமது கோரிக்கைகளை யாழ். பல்கலைக் கழக நிர்வாகம் தொடர்ந்து கவனத் தில் எடுக்காததால் இந்த மறியல் போராட்டத்தினை நடத்தியதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. மோகனதாஸ் மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் ஆகிய இருவரையும் காலை 9.00 மணிக்கு உள்ளே செல்ல அனும தித்த ஊழியர்கள் மாலை 4.00மணி வரை அவர்களை வெளியேறவிடா மல் அலுவலகத்தினைப் பூட்டி மறி யல் போராட்டத்தை நடாத்தினர்

கணக்குப் பதிவாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு முர ணான (12 ஆம் பக்கம் பார்க்க)

# ரோக்கியோ நிதியுதவியைப் பெறுவதற்கு அமைச்சர் மிலிந்த பெரும் பிரயத்தனம்!

(கொழும்பு)

**ரோக்கியோ மாநாட்டில் ஒதுக்கப்பட்ட நிதியுதவிகளை பெறுவதற்கான பெரும் முயற்சியில் அரசாங்கம், அமைச்சர் மிலிந்த மொறகொடவை ஈடுபடுத் தியுள்ளது. இதன் ஒரு கட்டமாக பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளியுறவு ஆணையாளர் கிறிஸ்தோப்பர் பற்றனை பிரசெல்சில் நேற்றுமுன் தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.**

இலங்கையின் புனர்வாழ்வு, புனர மைப்புக்கான உதவிகளை வழங்கு வதற்கு ரோக்கியோ மாநாட்டில், கூட் டுத்தலைமை தாங்கிய பிரதிநிதிக ளுடன் நடத்தும் பேச்சுவார்த்தை யின் தொடர்ச்சியாகவே, இந்தச் சந் திப்பு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி அமெரிக்க அதிகா ரிகளை வொஷிங்ரனில் சந்தித்த அமைச்சர் மிலிந்த மொறகொட, ஒஸ்லோவில் நோர்வே அதிகாரிகளு டனும் பேச்சுவார்த்தை நடத்தியி ருந்தார்.

ரோக்கியோ மாநாட்டில் கூட்டுத் தலைமையில் எடுக்கப்பட்ட முடிவு கள் தொடர்பாக அமைச்சர் மிலிந்த மொறகொடவும் ஆணையாளர் கிறிஸ் தோபர் பற்றனும் கலந்துரையாடிய தாகத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சி வான் விபத்தில் 9 வயதுச் சிறுமி மரணம்!

இயக்கச்சிப் பகுதியில் வான் விபத்தொன்றில் ஒன்பது வயது சிறுமி யொருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இயக்கச்சி பூரணியம்மன்பற்றைச் சேர்ந்த சிவகுரு ரஜிதா என்ற ஒன்பது வயது சிறுமியே உயிரிழந்தவராவார்.

நேற்றுமாலை 4.30 மணியளவில் இயக்கச்சி சந்தியில் புளியங்குளத்தில் இருந்து பளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வான் ஒன்று மோதியதில் இச்சிறுமி படுகாயமடைந்தார். இவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது இடைவழியில் உயிரிழந்தார்.

### விண்ணாணம் விநாசியர்



பக்கத்து வீட்டு உதவியை நாடுறதில் அம்மா குறியாத்தான் இருக்கிறா.

### மின்சார கட்டணம் அதிகரிப்பு

வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் வற் வரி அதிகரிக்கப்பட்டிருப்பதனால் அடுத்த மாதம் தொடக்கம் மின்சாரக்கட்டணம் உயர்த் தப்படுவதாக இலங்கை மின்சாரசபைத் தலை வர் எஸ்.சுபைதின் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் .மின்சாரக் கட்டணங்கள் 5 சதவீதத்தால் அதிகரிக்கப்படுகின்றது. முத லாவது 40 அலகுகளுக்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் நெருக்கடியைத் தீர்க்க இந்திய அரசாங்கம் தலையிடும்!



(இஸ்லாமாபாத்)

இலங்கையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவுக்கும் இடையில் ஏற்பட்டிருக் கும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்க்கும் விவகாரத்தில் இந்தியா தலையீடு செய்ய விருப்பதாக தெரியவருகிறது.

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் உச்சிமாநாட்டில் பங்கேற்ற இந்தியப் பிர தமர் அடல் பிஹாரி வாஜ்பாய், ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அரசி யல் நெருக்கடியைத் தீர்க்க உதவுவதாக உறுதியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்லாமாபாத்தில் உள்ள செரீனா- ஹோட்டலில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற சந்திப்பொன்றில் ஜனாதிபதி சந்திரிகாவும், இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயும் இந்த விவகாரம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.



இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி சந்தி ரிகா இலங்கையின் தற்போதைய அரசி யல் நெருக்கடி நிலை குறித்து விரிவாக எடுத்துக்கூறியதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, இந்தச் சந்திப்புக் குறித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான அடித்தளமாக புலிகளின் வரைபை ஏற்கவும்

### இடதுசாரிக் கட்சிகள் கோரிக்கை

விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள வடக்கு- கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் குறித்த திட்டவரைபை சமாதானப் பேச்சுக்களுக்கான ஆரம்பப்படிக்கல்லாக ஏற்றுக்கொள்ளுமாறு இடதுசாரிக்கட்சிகள் அரசாங்கத்திடமும், விடு தலைப்புலிகளுக்கும் கோரிக்கை விடுத்துள் ளது.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியா ளர் மாநாட்டில் புதிய இடதுசாரி முன்னணி யின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண உரையாற்றும்போது, இந்தத் தகவலைவெளி யிட்டுள்ளார்.

தற்போது எற்பட்டுள்ள அரசியல் நெருக்க டிகளில் இருந்து இடதுசாரிகள் முன்னணிக ளான லங்கா சமாசக்கட்சி, கம்யூனிஸ்கட்சி, ஜனநாயக இடதுசாரி (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டிருந்த திணைக்களங்கள் மீண்டும் உள்துறையிடம்

### ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

பாதுகாப்பு அமைச்சின் கீழ் அண்மையில் கொண்டுவரப்பட்டசில திணைக்களங்களின் நிர்வாகங்கள் மீண்டும் உள்துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுவதாக ஜனாதிபதி சந்தி ரிகா அறிவித்தார்.

இந்தமாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதியி னால் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி இப்பொறுப்பு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி சிறைச்சாலை குடிவரவு, குடிய கல்வு, ஆட்பதிவு குடிசன புள்ளிவிபரவியல் இந்திய வம்சாவழியினரைப் பதிவுசெய்யும் ஆணையாளர் அலுவலகமும் மீண்டும் உள் துறை அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள் ளன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## Diploma in Hardware Engineering

- உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்காக 100% செய்முறைப் பயிற்சிநெறி
- ரஷ்ய கணினிப் பொறியியலாளரினால் பயிற்சிகள் வழங்கப் படும்.
- 1 ஆவது பிரிவினர் தமது பயிற்சிநெறியை பெற்று, பூர்த்தி செய்துள்ளனர்.
- புதிய பிரிவுகள் 05.01.2004 ல் ஆரம்பம் 01.01.2004 ல் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ஒரு பிரிவில் 10 பேர் மட்டும்
- ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கணினி பயிற்சிக்காக வழங் கப்படும்.
- பயிற்சிக்காலம் 1 மாதம்

O/L மாணவர்களுக்கான கணினிப் பயிற்சிக்காலம் 11 மாதம் ரூபா 1000/= மட்டும்

**NORTH LANKA**
**கணினி நிறுவனம்**
**சங்கானை**

(சி-2047)



## பிறந்தநாள் வாழ்த்து



*யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த*
**வெற்றிவேலு நாகலிங்கம்**

தனது 100 ஆவது பிறந்ததினத்தை இன்று 07.01.2004 தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு மகள், மகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப் பாட்டப்பிள்ளைகள் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்து கின்றனர்.

தகவல்:
N.பேரின்பநாதன்.

(578)


## வர்த்தக நிலையங்கள் திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இன்றுமுதல் எதிர்வரும் சனி முழுநாள், ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் கடைகள் திறந்து வியாபாரம் செய்வதற்கு சகல வர்த்தகர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. இந்த நாட்களில் வேலைசெய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

## அறக்கொடை வழங்கலும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 72 ஆவது பிறந்த நாள் அறக்கொடை வழங்கும் விழாவும், நூல்வெளியீட்டு நிகழ்ச்சியும் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணிக்கு சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசாவும், சிறப்பு விருந்தினராக வலி.வடக்கு பிரதேச செயலர் க.குணராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் தங்கம்மா அப்பாககுட்டி எழுதிய "அறிவொளி காட்டிய சான்றோர்" என்னும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளது.

வலி.வடக்கு பிரதேச செயலர் க.குணராசா நூலை வெளியீட்டு வைப்பார். வெளியீட்டுரையை தமிழ்த்துறைத் தலைவர் சி.சிவலிங்கராசா நிகழ்த்துவர்.


## சிறு விளம்பரம்

**காணி விற்பனைக்கு**

மெமோறியல் லேன் மானிப்பாயில் உள்ள எலிம் சிறுவர் இல்லத்துக்கு அருகாமையில் வைரவர் கோவிலோடு சேர்ந்த 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு:-சுரேஸ் குமார் - 0776100822

(575)



## கலாநிதி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் 79 ஆவது பிறந்தநாள் அறக்கொடை விழா



*சிந்தனைச் செல்விசிவ வந்தனைச் செல்வி மறைச்*
*சிங்காரம் பேசும் செல்வி*
*சிறுவரொடு முதியவர் அநாதைக் குழந்தைகள்*
*திக்கற்ற பெண் பிள்ளைகள்*
*முந்துகலை கற்கவழி யில்லாத மாணவர்கள்*
*முட்டுற்ற வறிய மக்கள்*
*முன்னேற வழிகாட்டும் அன்னையாய்ப் பணிபுரியும்*
*முதறி வளமந்த செல்வி*
*சுந்தரி சுதந்தரி தெல்லியூர்த் துர்க்கையின்*
*துணையடி பிடித்த செல்வி*
*தூய திரு முறைபுரா ணங்களின் சுவை பேசித்*
*தொழுசைவம் வளர்க்கும் செல்வி*
*செந்தமிழ்ச் செல்விசிவ சோதியுட்சுடர்கண்டு*
*சித்தம் தெளிந்த செல்வி*
*திகழ்கலா நிதிதங்கம் மாஅப்பாக்குட்டியெனும்*
*செல்விபல் லாண்டு வாழி.*

அருட்கவி,
சி.விநாசித்தம்பி



## பெயர் மாற்றம்

ஐயாத்துரை வேலும்மயிலும் என்பவருக்கும், இராமலிங்கம் தனசிகாபதி (கன்னிப்பெயர்) என்பவருக்கும் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் 13.09.1979 வியாழக்கிழமை பிறந்த வேலும்மயிலும் பார்த்திமா ஆகிய நான் 07.01.2004 முதல் எனது பெயரை **வேலும்மயிலும் சாகித்தியா** என மாற்றியுள்ளேன் என்பதை இத்தால் இலங்கை அரசினர்க்கும், சகல பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

*சவனாய்,*
*புலோலி வடக்கு,*
*புலோலி, பருத்தித்துறை.*

(577)

வே.சாகித்தியா.



## அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு

## மாபெரும் மகளிர் தேசிய விளையாட்டு விழாவிற்காக

யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறையினரும்
யாழ்.மாவட்ட அரசியல்துறை - மகளிரும் இணைந்து
நடாத்தும் மாவட்டத் தெரிவு விளையாட்டுப் போட்டிகள்

## பெண்கள் மட்டுமே முதன்முதலாக பங்கெடுக்கும் போட்டிகள்





1. 100 மீற்றர் ஓட்டம்
2. நீளம் பாய்தல்
3. 200 ,, ,,
4. உயரம் ,, ,,
5. 400 ,, ,,
6. ஈட்டி எறிதல்
7. 800 ,, ,,
8. தட்டெறிதல்
9. 1500 ,, ,,
10. முப்பாய்ச்சல்
11. 3000 ,, ,,
12. தடைதாண்டல் (கேடில்ஸ்)
13. 04x100 ,, ,,
14. 04x400 மீற்றர் ஓட்டம்

இவற்றுடன்
* சைக்கிள் ஓட்டம்
* மரதன் ஓட்டம்
* கிளித்தட்டு
* கரப்பந்து

ஆகிய போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள்

* 15.01.2004 வரை அனைத்து வயது பெண்களிடமிருந்தும் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆர்வமிக்க அனைத்து வீராங்கனைகளையும் பங்குகொள்ளுமாறு அழைக்கின்றோம்.
இவற்றில் வெற்றி கொள்ளும் 2 வீராங்கனைகள் தேசிய விளையாட்டுப்போட்டிகளில் கலந்துகொள்வர்.
வெற்றியீட்டும் வீராங்கனைகளுக்கு தங்க பரிசில்களும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு
1. யாழ். மாவட்ட விளையாட்டுதுறையினர்
2. பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர்
3. கோட்ட, பிரதேச அரசியல்துறை செயலகங்கள்.

விளம்பர அனுசரணை ஐக்கிய வாழைக்குலை விற்பனவுச் சங்கம்,
வலி. கிழக்கு,
நீர்வேலி.

(580)

## படையினருக்கான கனரக ஆயுதங்கள் கொள்வனவு செய்வதில் ஜனாதிபதி தீவிரம்

(கொழும்பு)

சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள பாகிஸ்தான் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க - பாகிஸ்தான் உறுதியளித்த இராணுவ உதவிகள் இலங்கைக்கு வழங்கப்படாமை குறித்து, அந்த நாட்டு ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே, பாகிஸ்தான் அரசு இலங்கைக்கு 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இராணுவ உதவிகளைக் கடன் அடிப்படையில் வழங்குவதற்கு உறுதியளித்தபோதும், இதுவரை அந்த உதவி வழங்கப்படாமை குறித்து இச் சந்திப்பின்போது ஜனாதிபதி பேச்சு வார்த்தை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேசமயம், இராணுவ தொண்டர் படையின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் தலைமையில், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் குழுவொன்று, கனரக ஆயுதங்களைப் பார்வையிடுவதற்காக அண்மையில் சீனாவுக்குச் சென்று திரும்பியுள்ளது.

இலங்கைக்கு ஏற்கனவே ஆயுதங்களை விநியோகிக்கும் நிறுவனமான 'நொறிங்கோ' நிறுவனமே அவர்கள் சீனாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

ஜனாதிபதிக்கும், முப்படைத் தளபதிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் பின்னரே, ஆயுதக் கொள்வனவுக்கான ஜனாதிபதியின் உடன்பாட்டுடன் இந்த விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சீனா சென்ற இந்த உயர் மட்டக் குழுவினர் - நீண்டதூரப் பீரங்கிகள், கனரக ஆயுதங்கள் மற்றும் அவற்றுக்கான ரவைகள் என்பனவற்றைப் பார்வையிட்டுள்ளதுடன், இதைவிட படையினருக்குத் தேவையான வேறு ஆயுதங்களையும் பார்வையிட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கு உரையாற்றுவார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்னும் ஓரிரு தினங்களில் நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்தில் - பிரதமர் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நல்லிணக்க அரசை உருவாக்க முன்வரவில்லை எனத் தெரிவித்த குற்றச்சாட்டு குறித்து எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்க்கும் பொருட்டே இந்த உரை இடம்பெறவுள்ளதெனத் தெரியவருகிறது.

இதேவேளை, ஜனாதிபதி இனவாதக் கட்சிகளுடன் கூட்டுச்சேர முயற்சித்து வருகின்றமையானது - சமாதான முயற்சிக்கு விடுக்கப்படும் சவாலாகவுள்ளமையால், ஜனாதிபதியுடனான கூட்டரசாங்கம் அமைக்கும் திட்டத்தினைக் கைவிடுமாறு சில அமைச்சர்கள் பிரதமருக்கு வலியுறுத்தியுள்ளார்கள்

இதன் காரணமாக ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்தும் தனது பேச்சின்மூலம் நாட்டு மக்களுக்கு விளக்கமளிப்பார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (01)

## புல்லுமலையில் பதுங்குகுழி புலிகளால் மூடப்பட்டுவிட்டது!

### கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

விடுதலைப் புலிகளால், புல்லுமலையில் அமைக்கப்பட்டு வந்த பதுங்குகுழி, அவர்களால் மூடப்பட்டுவிட்டதாகப் படையினர் அறிவித்ததாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

செங்கலடி - பதுளை வீதியில் மட்டக்களப்பு நகரிலிருந்து 40 கி.மீற்றர் தொலைவில் புல்லுமலை அமைந்துள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தமது பாதுகாப்பு நிலைகளுக்கு அண்மையாக விடுதலைப் புலிகள் பதுங்குகுழிகளை அமைத்து வருவதாகப் படைத்தரப்பு கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தது.

இதனையடுத்து, இந்தப் பகுதிக்குச் சென்ற கண்காணிப்புக் குழுவினர் - இது யாருடைய பகுதி என்பதில் தெளிவின்மை காணப்படுவதாகவும், கொழும்பு தலைமைகத்திலிருந்து இது தொடர்பில் தகவல் வரும்வரையும் காத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

இதன்பின்னர், கொழும்பு தலைமையகத்திலிருந்து வந்த இருவர், பதுங்குழி அமைக்கப்பட்ட இடத்திற்குச் சென்று பார்வையிட்டனர்.

அதனையடுத்து, கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்காணிப்புக் குழுவினர் விடுத்த அறிக்கையில் - புல்லுமலைப் பகுதியில் புதிதாக பதுங்குகுழி அமைப்பதற்கான எந்தவித அறிகுறியும் இல்லையெனவும், அவ்வாறான பதுங்குழிகள் மூடப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

## ஜனாதிபதி சந்திரிகா வாஜ்பாயுடன் பேச்சு

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புச் சபையின்- நேற்றுமுன்தினக் கூட்டத்தில், ஜனாதிபதி சந்திரிகா இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயைச் சந்தித்து உரையாடினார்.

இதன்போது, இலங்கையில் தற்போது நிலவும் முறுகல்நிலை தொடர்பாகவும், பிராந்திய பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் எதிர்காலத்தில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடையே ஒரு இணக்கப்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்பு இந்த பேச்சுவார்த்தை மூலமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிய ஜனாதிபதியையும் இலங்கையின் ஜனாதிபதி சந்திக்கவிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.(01)

### கொலைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக

## வவுனியா பொலிஸ் தலைமையகத்தில் படையினர், பொலிஸாருக்கு கூட்டம்!

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் கொலைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பான கூட்டமொன்று, வவுனியா மாவட்ட பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு ஆரம்பமான இந்தக் கூட்டத்திற்கு, வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான மிஸ்கின் தலைமை தாங்கினார்.

இதில் பிரிகேடியர் ஜனக ரத்நாயக்க மற்றும் வவுனியா மாவட்ட படையினர், பொலிஸார் கலந்து கொண்டனர்.

இதில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், இன்றுவரை 12 கொலைகள் வவுனியா மாவட்டத்தில் இனந்தெரியாதோரால் நடத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். எனவே, இவற்றினைக் கட்டுப்பாட்டுககுள் கொண்டுவரவேண்டியுள்ளது.

இனிவரும் காலங்களில் வவுனியா மாவட்டத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடுபவர்களையும், சந்தேகத்துக்கிடமான வாகனங்களையும் சோதனையிடுவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

அத்துடன், இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் படையினருக்கு அல்லது மாற்று இயக்கங்கள் ஏதாவது ஒன்றில் தொடர்பு வைத்தவர்களா என்ற தகவலையும் சேகரிப்பதெனவும் பொலிஸ் தரப்பால் முடிவெடுக்கப்பட்டது. (03)

## அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் பெறுமதி சேர்வரி நீக்கப்பட்டுள்ளது!

### அரசாங்க பேச்சாளர் தெரிவிப்பு

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றுக்கு அரசாங்கம் பெறுமதி சேர்வரியை நீக்கியிருப்பதாக அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது.

பிஸ்கட், தேயிலை, கோதுமை மா, பீங்கான் பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா வகைகள் முதலியனவற்றுக்கே இத்தகைய பெறுமதி சேர்வரிகள் நீக்கப்பட்டிருக்கின்றன.

இதேவேளை உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்றவற்றின் பெறுமதி சேர் வரியானது 5 வீதத்தால் உயர்த்தப்பட்டிருக்கின்றது. எனினும், இத்தொகையைப் பாவனையாளர்களிடம் இருந்து அறவிடுவதில்லையென அரசு தீர்மானித்திருக்கின்றது.

இந்த விலை உயர்வால் மாதம் ஒன்றுக்கு 5500 ரூபா வருமானம் பெறும் குடும்பமொன்று - 13 ரூபா முதல் 20 ரூபாவரையான மேலதிக செலவைச் செய்யவேண்டி ஏற்படும் எனவும் பேச்சாளர் அலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (01)

## குழந்தையை விற்க முற்பட்ட பெண் கைது

(கொழும்பு)

மத்திய கிழக்கில் பணிபுரிந்துவிட்டு, நாடு திரும்பிய பெண்ணொருவர் - தனது குழந்தையை விலைக்கு விற்க முற்பட்ட சம்பவம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையப் பகுதியில் இடம்பெற்றது.

லெபனானில் கடந்த சில ஆண்டுகளாகப் பணிபுரிந்துவிட்டு நாடு திரும்பிய 35 வயதுடைய பெண்ணொருவரே, இவ்வாறு தனது குழந்தையை விற்க முற்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட மேற்படி பெண் - நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி பொங்குதமிழ்

ஈழத்தமிழர்களின் நியாயமான உரிமைகளையும், அதற்காக அவர்கள் நடத்தும் போராட்டத்தையும் சர்வதேச சமூகம் ஆதரிக்கவேண்டும்.

தென்னிலங்கை அரசியல் குழப்பங்களால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வு தடைப்படுவதனை அனுமதிக்கக்கூடாது.

ஆகிய இரு கோரிக்கைகளின் அடிப்படையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்விசார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியன இணைந்து கிழக்குப் பல்கலைக்கழக மைதானத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி பொங்குதமிழ் நிகழ்வு ஒன்றை நிகழ்த்த உள்ளனர்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை மண்டபத்தில் நடந்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பேரவைத் தலைவர் அருள் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் - பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் மூக்கையா, வர்த்தகதுறைத் தலைவர் ராஜன் சத்தியமூர்த்தி, இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவர் ஆறுமுகம் உட்பட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பில் பொங்குதமிழ் நிகழ்ச்சியில் சிங்கள, முஸ்லிம் மக்களையும், வெளிநாட்டு இராஜதந்திரிகளையும், தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோரையும் அழைப்பது எனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. (01)

## கடற்படை அதிகாரி உரிமை மீறல் வழக்கு

(கொழும்பு)

தமக்கு வழங்கப்பட வேண்டிய கப்டன்தரப் பதவி உயர்வினை வழங்கப்படாதமை குறித்து, கடற்படை அதிகாரி ஒருவர் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

லெப்டினன் ரி.டி. ஆதிப்பொல என்ற கடற்படை வீரர் ஒருவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தமக்கு கிடைக்கவேண்டிய பதவி உயர்வு வேறொருவருக்கு கிடைப்பது தொடர்பாக இடைக்கால தடையுத்தரவு ஒன்றினை விதிக்கவேண்டும் என தனது மனுவில் அவர் கோரியுள்ளார். (01)

## பதின்மூன்று வருடங்களாக மூடப்பட்டிருந்த பாடசாலை நேற்றுமுன்தினம் திறந்துவைப்பு

அம்பாறையில் 13 வருடங்களாக மூடப்பட்டிருந்த தமிழ்ப் பாடசாலை ஒன்று - நேற்றுமுன்தினம் மீண்டும் திறந்துவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வசதி கருதியே தங்கவேலாயுதபுரம் அ.த.க. பாடசாலை மீண்டும் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்களால், இங்கு இயங்கிவந்த பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளமையால், நேற்றுமுன்தினம் அப்பாடசாலை அங்கு மீளவும் இயங்கத் தொடங்கியுள்ளது.

பாடசாலையின் அதிபர் கே. தெய்வேந்திரன் தலைமையில் இப்பாடசாலை திறப்பு நிகழ்வு இடம்பெற்றது. இதில் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் எம் காசிம், திருக்கோவில் கோட்டக் கல்வி அதிகாரி ரி.செல்லத்துரை மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்விற்கு விடுதலைப்புலிகள் சார்பாக அம்பாறை மாவட்ட துணைத் தளபதி சச்சி மாஸ்ரர், அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயின்ரென், உடும்பன்குள கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் விஸ்வநாதன் முதலானோரும் கலந்துகொண்டனர்.

இங்கு இரு ஆசிரியர்களே நியமனம் பெற்றவர்கள். எனினும், இப்பாடசாலைக்குரிய வசதிகளை விரைவாக ஏற்படுத்திக் கொடுக்கப் போவதாகவும், விரைவில் இந்தப் பாடசாலையில் 11 ஆம் ஆண்டு வரை கற்பிக்கப்படவிருப்பதாகவும், அப்பகுதிக் கல்வி அதிகாரி உறுதியளித்துள்ளார்.

### கடந்த ஆண்டில் மட்டும்

## நாடாளுமன்றப் பிரேரணைகளுக்கு எதிராக 36 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல்!

கடந்த ஆண்டில் மாத்திரம் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரேரணைக்கு எதிராக 36 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவை 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த எண்ணிக்கையிலானது ஆகும்.

பொதுமக்கள் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் போன்றவர்கள தாக்கல் செய்த இந்த மனுக்களில - சட்டமா அதிபரே பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலவுரிமைப் பிரேரணைக்கு எதிராக மாத்திரம் 11 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

வெளிநாட்டு நாணய மாற்றுப் பிரேரணை, புத்திஜீவிகள் சுதந்திர அமைப்பு பிரேரணை, உள்ளூராட்சி சபைகள் பிரேரணைகளுக்கு எதிராகவே இந்த 36 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (01)

# சமநிலையில் முடிவடைந்துள்ள இந்திய - அவுஸ்ரேலிய போட்டி



அவுஸ்ரேலிய - இந்திய அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெற்ற நான்காவதும், இறுதியானதுமான டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிவடைந்ததுடன், தொடர் ஆட்டமும் இரு அணிகளுக்கும் சமநிலையில் முடிவடைந்தது.



நான்காவது போட்டியின் முதல் இனிங்ஸில் இந்திய அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 705 ஓட்டங்களைப்பெற்றது. இதில் ஷேவாக், லக்ஸ் மன் மற்றும் பட்டேல் ஆகியோர் மிகச்சிறப்பாக விளையாடி 72, 178, 62 ஓட்டங்களுடனும், சச்சின் 14 மாதங்களுக்குப் பின்னர் மிகச்சிறப்பாக விளையாடி ஆட்டமிழக்காமல் 241 ஓட்டங்களையும் பெற்றனர்.

அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர்களில் பிரட்லீ, கிலெஸ்பி இருவரும் 4, 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதன் பின்னர் தனது முதல் இனிங்ஸை தொடங்கிய அவுஸ்ரேலிய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 474 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் லாங்கர் 117, ஹைடன் 67 மற்றும் ஹட்ரிச் 125 கூடிய ஓட்டங்களை எடுத்தனர்.

அவுஸ்ரேலிய அணி பலோஒன் நிலையில் இருந்தபோதும் இந்திய அணி தனது இரண்டாவது இனிங்ஸை ஆடத்தொடங்கி, இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. இதனுடன் முதல் இனிங்ஸில் மேலதிகமாக உள்ள ஓட்ட எண்ணிக்கையையும்சேர்த்து அவுஸ்ரேலிய அணிக்கு நான்காம் நாள் மாலை 443 ஓட்ட எண்ணிக்கையை இலக்காக வைத்தது. இதில் ஷேவாக் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தும், ராவிட், சச்சின் முறையே 91, 60 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமலும் இருந்தனர்.



நான்காம் நாள் மாலை தனது இரண்டாவது இனிங்ஸை ஆடத்தொடங்கிய அவுஸ்ரேலிய அணி, பத்து ஓட்டங்களை எடுத்து விக்கெட் இழப்பின்றி இருந்தது. பின்னர் ஐந்தாம் நாளான நேற்று ஆட்டத்தைத் தொடங்கிய அவுஸ்ரேலிய அணி ஆட்ட நேரமுடிவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 357 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதில் லாங்கர், பொண்டிங், மார்ட்டின், அணித்தலைவர் ஸ்ரீவ் வோ ஆகியோர் முறையே 47, 47, 40, 80 ஓட்டங்களையும் ஹட்ரிச் ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய பந்துவீச்சாளர்களில் அனில்கும்ளே 4, பதான், கார்த்திக் இருவரும் முறையே ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதன்மூலம் நான்கு தொடர்கொண்ட போட்டிகள் இரு அணிகளுக்கும் சமநிலையில் முடிவடைந்தது.

இந்த ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராக சச்சின் டெண்டுல்கரும், தொடர் ஆட்டநாயகனாக ராகுல்ராவிட்டும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த டெஸ்ட்போட்டியுடன், அவுஸ்ரேலிய டெஸ்ட் தலைவரான ஸ்ரீவோ தனது கிரிக்கெட் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

# மூன்று நாடுகள் மோதும் ஒருநாள் போட்டித் தொடர்!

இந்திய, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடர் நேற்று முடிவுற்றதையடுத்து 3 நாடுகளுக்கிடையேயான ஒருநாள் போட்டித் தொடர் எதிர்வரும் வெள்ளியன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தியா, அவுஸ்ரேலியா, சிம்பாப்வே ஆகிய நாடுகள் பங்கேற்கும், இந்தப்போட்டி எதிர்வரும் 9ம் திகதி தொடங்கி பெப்ரவரி 10ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

3 நாடுகள் போட்டியில், ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா 4 முறை மோதவுள்ளன. புள்ளிகள் அடிப்படையில் முதல் இரண்டு இடங்கள் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

வெள்ளிக்கிழமை நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் இந்தியா, உலக சாம்பியனான அவுஸ்ரேலிய அணிகள் மோதுகின்றன. இந்தப் போட்டி மெல்போர்னில் பகல் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது. காலை 9.15 மணிக்கு போட்டி ஆரம்பமாகும்.

# மேற்கிந்திய தீவுகள் அணி 4 விக்கெட் இழப்பிற்கு 267

தென்னாபிரிக்காவிற்கெதிராக கேப்டவுனில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

முன்னதாக தென்னாபிரிக்க அணி தனது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 335 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் முதலாம் இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணியைவிட கூடுதலாகப் பெற்ற ஓட்டங்களுடனும், இரண்டாவது இனிங்ஸில் பெற்ற ஓட்டங்களுடனுமாக மொத்தம் 441 ஓட்ட எண்ணிக்கையை மேற்கிந்திய தீவுகளுக்கு இலக்காக வைத்தது தென்னாபிரிக்க அணி.

தென்னாபிரிக்க அணியின் இரண்டாவது இனிங்ஸில் கிப்ஸ் 142 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தும், கலிஸ் 130 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமலும், தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதற்கு உதவினர்.

அதன் பின்னர் 441 என்ற மிகப்பெரிய இலக்குடன் ஆடத்தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களை 47 ஓட்டங்களுக்குள் இழந்தது. அதன்பின்னர் ஜோடி சேர்ந்த அணித் தலைவர் லாராவும், துணைத் தலைவர் சர்வானும் இணைப்பாட்டமாக 146 ஓட்டங்களைப் பெற்றனர்.

அணித் தலைவர் லாரா 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். இதனைத் தொடர்ந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ராம் நரேஷ் சர்வான் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெறுவதற்கு மேலும் 174 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் உள்ளது. ஆட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது.

# அ.தி.மு.கவுடன் கூட்டணிசேர இப்போதைக்கு வாய்ப்பில்லை!

## பா.ஜ.க. செயலாளர் பிரமோத் மகாஜன்



(சென்னை)

அ.தி.மு.கவை தற்போதைய சூழநிலையில் எங்கள் கூட்டணியில் சேர்க்க வாய்ப்பில்லை. பா.ஜ.க.வும், பா.ம.க.வும்தான் கூட்டணியில் உள்ளன என்று பா.ஜ.க பொதுச் செயலாளர் பிரமோத் மகாஜன் கூறினார்.

போர்ட் பிளேயரில் அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது,

மக்களவைத் தேர்தல் 3 அல்லது 4 மாதங்களுக்கு முன்னரே வரலாம். தேர்தல் திகதியை தேர்தல் கமிஷன்தான் தீர்மானிக்க வேண்டும். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் செய்த வளர்ச்சிப் பணிகளால் பா.ஜ.கட்சி நல்ல நிலையில் உள்ளது.

தமிழ்நாட்டில் தே.ஜ.கூட்டணியைவிட்டு தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் வெளியேறிவிட்டன. இதற்கான காரணம் அவர்களுக்கு தெரியும். தமிழ் நாட்டில் தே.ஜ.கூட்டணி பா.ஜ.க. மற்றும் பா.ம.க. என்ற நிலையில் இருக்கும். தற்போதைய சூழ்நிலையில் அ.தி.மு.க.வை எங்கள் கூட்டணியில் சேர்ப்பதற்கான வாய்ப்பு இல்லை. தேர்தல் சமயத்தில் நிலைமை மாறலாம். இப்போதைக்கு அதுபோன்ற சூழ்நிலை இல்லை என்று அவர் கூறினார்.

பா.ஜ. கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 11, 12 ஆம் திகதிகளில் ஹைதராபாத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் அப்பாஸ் நக்வி ஹைதராபாத்தில் முகாமிட்டுள்ளார்.

அங்கு அவர் நிருபர்களிடம் கூறுகையில் - தேர்தல் முன்கூட்டியே வருவதற்கான வாய்ப்பு பாதிக்குப் பாதி உள்ளது. எங்கள் கட்சியைப் பொறுத்தவரை எதையும் உறுதியாக இப்போது சொல்ல முடியாது. பா.ஜ.க.வும் கூட்டணி கட்சிகளும் விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். இன்னொரு பாதியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு எடுக்க வேண்டும்.

தேசிய செயற்குழுவில் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி, மாநில முதல்வர்கள், மாநில கட்சித் தலைவர்கள் உட்பட 200 இக்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

இதற்கு முன்னோடியாக செயற்குழு நிகழ்ச்சி நிரலை உறுதி செய்வதற்காக 10 ஆம் திகதி கட்சியின் மூத்த நிர்வாகிகள், பொதுச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என்றார்.

செயற்குழுவை முன்னிட்டு ஹைதராபாத்தில் பா.ஜ.க.வின் பேரணி நடைபெறும். இதில் பிரதமர் வாஜ்பாய், அத்வானி வெங்கய்யா நாயுடு போன்ற தலைவர்கள் பேசுவார்கள் என்றும் நக்வி மேலும் குறிப்பிட்டார்.

# நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதாவும் போட்டி?



(சென்னை)

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் மதுரைத் தொகுதியிலிருந்து முதல்வர் ஜெயலலிதா போட்டியிடலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் திண்டுக்கல் தொகுதியில் அதிமுக சார்பில் சசிகலா நிறுத்தப்படலாம் என்று அந்தக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் பிரதமர் பதவிக்கு முதல்வர் ஜெயலலிதாவை முன்நிறுத்துவது என்றும், அதற்காக மதுரை மக்களவைத் தொகுதியில் அவரை போட்டியிடச் செய்வது என்றும் அ.தி.மு.க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் 2020 ஆம் ஆண்டில் இந்தியாவை வல்லரசாக்கும் முழுத்தகுதி ஜெயலலிதா ஒருவருக்கே உள்ளது. எனவே வரும் மக்களவைத் தேர்தலில் மதுரைத் தொகுதியில் ஜெயலலிதா போட்டியிடவேண்டும். அதற்கு தொண்டர்கள் முழுமூச்சுடன் செயலாற்றவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேர்தலுக்குப் பின்னரே காங்கிரசுடன் கூட்டணி

## முலாயம்சிங் யாதவ் அறிவிப்பு



தேர்தலுக்குப் பிறகு காங்கிரசுடன் கூட்டணி அமைக்கப்படும் என உத்தரப் பிரதேச முதல்வர் முலாயம்சிங் யாதவ் தெரிவித்தார்.

மக்களவை தேர்தலில் கூட்டணி வியூகங்களை பாரதீய ஜனதாவும், காங்கிரசும் தீவிரமாக வகுத்து வருகின்றன. உத்தர பிரதேசத்தில் முக்கிய கட்சியான சமாஜ்வாதிகட்சி யாருடன் கூட்டணி அமைக்கும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்த நிலையில் சமாஜ்வாதி கட்சித் தலைவரும், உத்தரப்பிரதேச முதல்வருமான முலாயம்சிங் யாதவ் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் -

மக்களவை தேர்தலில் சமாஜ்வாதி கட்சி யாருடனும் கூட்டணி அமைக்காது. தனித்துப் போட்டியிடும். பாரதீய ஜனதா, பகுஜன் சமாஜ் கட்சியுடன் எந்த உடன்பாடும் வைத்துக்கொள்ளமாட்டோம். ஆனால், தேர்தலுக்குப் பிறகு நாங்கள் காங்கிரசுடன் பிரச்சினை அடிப்படையில் கூட்டணி அமைக்க வாய்ப்புள்ளது.

சமாஜ்வாதியும் - பா.ஜ.வும் நெருங்கிவருவதாக வெளியாகும் தகவல்கள் சுயநலவாதிகள் சிலர் திட்டமிட்டுச் செய்யும் சதியாகும். சமாஜ்வாதியின் மதசார்பின்மை நம்பிக்கை அனைவருக்கும் தெரியும்.

கல்யாண்சிங் பிரதமர் வாஜ்பாயை சந்தித்தது தனிப்பட்ட விவகாரம். அதற்கு அரசியல் ரீதியான அர்த்தம் எடுத்துக்கொள்ளக்கூடாது எனக் கூறினார்.

இதற்கிடையே, காங்கிரசுடன் கூட்டணி அமைப்பது குறித்து பகுஜன் சமாஜ்கட்சித் தலைவர் மாயாவதி எதிர்வரும் 16 ஆந் திகதி முடிவை அறிவிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விபரணப் புள்ளிவிபரவியல்

L.S.ஜெகன்-
B.A(Hons).Geo.Spl



மீடிறன் வளையி (Frequency Cure)

புள்ளிவிபரவியற் கொள்கையில் உள்ள அடிப்படைக்கோட்பாடுகள் தத்துவங்கள் யாவற்றையும் விபரிப்பதற்கும், வெளிக்கொணர்வதற்கும் கருவிக்கப்பட்ட வரைபே மீடிறன் வளையி ஆகும். அதாவது இழை வரையத்தில் காணப்படுகின்ற நிரல்களின் நடுப்புள்ளியூடாக அல்லது வகுப்பாயிடைகளின் நடுப்பெறுமானங்கள் ஊடாக வரையப்படுகின்ற தொடர் வளைகோடே மீடிறன் வளையி ஆகும்.





Eg:-

| வகுப்பாயிடை | மீடிறன் (f) | திரட்டு மீடிறன் | |
|---|---|---|---|
| | | கீழின தி.மீ | மேலின. தி.மீ |
| 30 - 40 | 05 | 05 | 32 |
| 40 - 50 | 07 | 12 | 27 |
| 50 - 60 | 10 | 22 | 20 |
| 60 - 70 | 06 | 28 | 10 |
| 70 - 80 | 04 | 32 | 04 |

$Q_2 = \frac{n}{2}^{th}$ ஈட்டு

$= \frac{32}{2}^{th}$ ஈட்டு

$= 16^{th}$ ஈட்டு

$= 57$

$Q_3 = \frac{n \times 3}{4}^{th}$ ஈட்டு

$= \frac{32 \times 3}{4}^{th}$ ஈட்டு

$= 24^{th}$ ஈட்டு

$= 65$

$Q_1 = \frac{n}{4}^{th}$ ஈட்டு

$= \frac{32}{4}^{th}$ ஈட்டு

$= 8^{th}$ ஈட்டு

$= 47$

காலணை வீச்சு $= Q_3 - Q_4$

$= 65 - 47$

$= 18$

காலணைவீச்சு $= \frac{(Q_3 - Q_1)}{2}$

$= \frac{65 - 47}{2}$

$= 9$



மையநாட்ட அளவைகள்
**( MEASURE OF CENTRAL TENDENCY)**

தரவுத்தொகுதி ஒன்றில் முழுத்தரவினையும் எடுத்துக்காட்டுவதற்கு அவற்றிலிருந்து பெறப்படுகின்ற தனிப்பெறுமானங்களே மையநாட்ட அளவைகள் என்பர். இதனடிப்படையில் பயன்பாட்டிலுள்ள மையநாட்ட அளவை களாவன.

1. இடை (Mean)
2. இடையம் (Median)
3. ஆகாரம் (Mode) போன்றனவாகும்.

இந்த மைய நாட்ட அளவைகளை அமைப்பதன் பிரதான நோக்கங்களாவன.

- தரவுத்தொகுதி ஒன்றினைத் தனிப்பெறுமானம் ஒன்றினால் உணர்த்தல்.
- தரவுத்தொகுதிகளின் ஒப்பீட்டினை எளிதாக்குதல்.
- திருத்தமான தொடர்பினைக் கண்டறிதல்.
- மாதிரிகளில் இருந்து குடியின் இயல்புகளைக் கண்டறிதல்.
- தீர்மானம் எடுத்தலுக்கு உதவுதல்.

மையநாட்ட அளவைகள் பின்வரும் பண்புகளை திருப்தி செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- திடமாக வரையப்பட்டிருத்தல்.
- வரைவிலக்கணம் கணிதச் சூத்திரம் ஒன்றினால் உணர்த்தப்படுதல்.
- இலகுவாக விளங்கக் கூடியதாகவும், கணிப்பீட்டுக்குப் பயன்படுத்தக் கூடியதாகவும் இருத்தல்.
- தரவுத்தொகுதியின் எல்லா அவதானிப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டிருத்தல்.
- எல்லைப் பெறுமானங்களினால் பாதிக்கப்படாதிருத்தல்.
- தொடர்ந்து வரும் புள்ளியியற் செய்கைகளுக்கு உட்பட்டிருத்தல்.
- தொடர்ந்து வரும் கணிதச் செய்கைகளுக்கு உட்பட்டிருத்தல்.
- மாதிரியினது கோடலினால் பாதிக்கப்படாது நிலையாக இருத்தல்.

(தொடரும்...)

இங்கே மடிக்கவும்



# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

# கணிதம்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

7. 4327 + 803 = ___ 8. 7300 - 2495 = ___ 9. 403 x 7 = ___ 10. 5 ) 325

11. பின்வரும் எண் புதிரைப் பூர்த்தி செய்க.



வலமிருந்து இடம்.
1. A = 520 - 372 = ☐
2. C = 895 - 254 = ☐

மேலிருந்து கீழ்
3. A = 895 - 739 =
B = 965 - 134 =
D = 815 - 378 =

12. ஏழு தரம் ஆறு =..........................

13. 2x☐ , 3x☐ , ☐x8 , ☐x6 → 24
நடுவில் வட்டத்திலுள்ள எண்ணைப் பெறக்கூடியவாறு பெட்டிக்குள் எண்ணை எழுதுக.

14.

| | | |
|---|---|---|
| ஆய்வுகூடம் | கோயில் | மலசலகூடம் |
| பிரதான மண்டபம் | பிரதான வாயில் | வகுப்பறை |
| மைதானம் | பூந் தோட்டம் | நூலகம் |

ஒரு பாடசாலையின் அமைப்பை உரு காட்டுகின்றது.

14. பிரதான வாயிலுக்கு எத்திசையில் பூந்தோட்டம் காணப்படுகிறது.
15. பிரதான வாயிலுக்கு நிருதிமூலையில் என்ன காணப்படுகிறது.
16. பிரதான மண்டபத்திற்கு வடக்குத் திசையில் என்ன காணப்படுகிறது?
17. நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?
18. 3/8 பகுதிக்கு நிழற்றுக.
19. 5/8 என்பதன் பின்னத்தில் பகுதி எண்:......................
தொகுதி எண்......................
20. 7 கிலோ கிராம் சீனியை 500 கிராம் கொண்ட எத்தனை பைக்கற்றுக்களாகக் கட்டலாம்?
21. 8x9 = 60 + ☐ வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் யாது?
22. 5, 10, 15, ☐ 25, 30, ☐ வெற்றுக்கூடுகளில் வரவேண்டிய எண்களை எழுதுக.
23. 80, 40, ☐ 10, ☐ 2, 5 இவ்வெண் கோலத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.
24. 3 x 4 = ☐ ÷ 3 வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண் யாது?

ஒரு வகுப்பிலுள்ள சில மாணவர்கள் விரும்பும் உணவுகள் கீழுள்ள சலாகை வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதன் கீழ் கேட்கப்பட்ட இல. (25 - 29) வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.




25. அதிக மாணவர் விரும்பும் உணவு எது?
26. சம எண்ணிக்கையான மாணவர் விரும்பும் உணவுகள் எவை?
1.......................... 2..........................
27. பிட்டினை எத்தனை மாணவர் விரும்புகின்றனர்?
28. மாணவரின் விருப்பத்திற்கேற்ப உணவுகளின் பெயரை இறங்கு வரிசையில் எழுதுக.
29. முழு உணவையும் விரும்பும் மாணவரின் மொத்த எண்ணிக்கை யாது?
30. 8275ml ஐ l, ml இல் தருக.
31. 1/3 இற்கு சமவலுப் பின்னங்கள் இரண்டினைத் தருக.
32. 7/10 ஐ தசம எண்ணில் எழுதுக.
33. 8000 + 700 + 30 + 8 = ☐ வெற்றுக்கூட்டில் வரவேண்டிய எண்ணை எழுதுக.
34. இவ்வுருவில் உள்ள செங்கோணங்களை அடையாளமிட்டுக் காட்டுக.

| திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|
| 30 | | | | | | |
| 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 | 13 | போ.தி 14 | 15 |
| 161 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |

35. ஜுன் மாதத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?
36. 14 ஆம் திகதி போ.தி எனப் எழுதப்பட்டுள்ளது. அதனை விவரித்து எழுதுக.
37. ஜுன் மாதத்தில் எத்தனை திங்கட்கிழமை?
38. ஜுன் 30 ஆம் திகதி என்ன கிழமை?
39. ஜுன் மாதத்தில் அதிகமாகவுள்ள நாட்கள் எவை?
40. ரூபாய் 80.00 பெறக்கூடிய காசுத்தாள்கள் எவை?

## இரண்டாம்மொழி (சிங்களம்)

இலக்கம் 01 முதல் 10 வரையுள்ளதமிழ்ச்சொற்களை சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்களமொழியில் எழுதுக.

1. எலும்புகள்.................... 6. மாணவி..................
2. மூன்று.................... 7. பிட்டு..................
3. அப்பா.................... 8. பலாப்பழம்..................
4. பாட்டன்.................... 9. பழரசம்..................
5. அடுப்பு.................... 10. கேளுங்கள்..................

## ஆங்கிலமொழி (சர்வதேசமொழி)

இலக்கம் 01 முதல் 10 வரையுள்ள தமிழ் சொற்களை ஆங்கிலமொழியில் எழுதுக.

1. கரும்பலகை.................... 6. பலூன்..................
2. உப அதிபர்.................... 7. பட்டர்..................
3. காரியாலயம்.................... 8. கால்கள்..................
4. சந்தை.................... 9. தேசிக்காய்..................
5. தபாற்கந்தோர்.................... 10. ஆகாயவிமானம்..................

இலக்கம் 11 முதல் 20 வரையுள்ள ஆங்கிலச் சொற்களை தமிழ்மொழியில் எழுதுக.

1. Dog.................... 6. Good morning..................
2. Carnation.................... 7. Happy Birthday..................
3. White.................... 8. Thank You..................
4. Six.................... 9. Hands up..................
5. Rain.................... 10. How many..................

## அழகியல் - ஆக்கம் - உடற்பயிற்சி

1. தக திமி என்பது எந்த நடையின் தாளம்?
2. இழைத்தல் முறைமூலம் ஆக்கங்கள் செய்வதற்குத் தேவையான பொருட்களில் 02 கூறுக.
3. தேசப்பற்றையும், தேசத்தின் பெருமையையும் பிரதிபலித்து பாடும் பாட்டு எவ்வாறு அழைக்கப்படும்?
4. கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின்போது நிகழும் ஆரம்ப நிகழ்ச்சிகள் 03 தருக?
5. கோபாலன் தனது மகளின் பிறந்த நாளுக்கு ஒகன் ஒன்றைப் பரிசளித்தார். அதில் வாசிக்கப்படும் ஸ்வரங்கள் எத்தனை? அவை எவை?
6. இருபரிமாண கலையாக்கங்கள் 03 தருக?
7. குமார் இயங்கும் விளையாட்டு பொருட்களில் நடமாடும் ஆமை ஒன்றை செய்தான். அதன் தலை எதனால் செய்யப்பட்டிருக்கும்?
8. ஆரம்ப தையல் முறைகள் சில கூறுக?
9. நிறம்தீட்டப்படாத ஓவியம் என்ன பெயர் கொண்டு அழைக்கப்படும்?
10. விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றில் தரம் 1,2 மாணவர்கள் பங்கு பற்றிச் செய்யக்கூடிய நிகழ்ச்சிகளில் 02 தருக?
11. சந்திர வட்டக்கல் ஒன்றில் காணக்கூடிய விலங்குகள் 02 தருக?
12. அச்சுப்பதிதல் மூலம் அலங்காரங்களை ஆக்கப் பயன்படுத்தப்படும் பொருட்கள் 03 தருக?
13. நான்காவது உலகக் கிண்ண கிரிக்கெட் கோப்பையை வென்ற நாடு எது?
14. இலங்கையில் எந்த ஆண்டில் சார்க் விளையாட்டுக்கள் நடைபெற்றது?

## சுற்றாடல் தொழிற்பாடு

1. தான் ஈன்ற குட்டியை வயிற்றுப்பையில் வைத்து வளர்க்கும் பிராணி எது?
2. கடலில் செங்குத்தாக நின்றபடி நீந்தும் பிராணி எது?
3.  இது எந்த சின்னம் ?
4. 

1 லீற்றர் நீரை புனல்மூலம் ஊற்றினால் எதில் நீர் கூட வடியும்?
5.  இது என்ன அலங்காரம்?
6. ------------------------ இது என்ன கோடு?
7. 

எதில் உள்ள நீர் விரைவில் சூடாகும்.
8.  ஒளிக்கதிர் செல்லும் பாதையைப் பூர்த்தியாக்குக?
9. உலகில் உணவை தானே தயாரிப்பவை எவை?
10. அடிப்படை தையல் எத்தனை வகை?
11.  இக்கருவி எதற்குப் பயன்படுகிறது?
12. பூமியின் உபகோள் யாது?
13. இலங்கையின் முதல் பிரதமர் யார்?
14. இலங்கையின் தற்போதைய பிரதமர் யார்?

இங்கே மடிக்கவும்



15.  இவ்வுருவில் எத்தனை விம்பங்கள் தோன்றும்.
16.  இந்த அலங்காரம் எவ்வாறு அழைக்கப்படும்?
17. ! இக்குறியீடு எதனைக் குறிக்கிறது?
18. நீரினால் பரவும் விதை ஒன்று தருக?
19.  இதன் பெயர் யாது?
20. முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும் சுறா எது?
21.  இது நீரில் மிதக்கும் தாவரம். இது மிதக்கக் காரணம் யாது?
22. குட்டி போடும் மரம் எது?
23. மீனில் திசைமாற்ற உதவும் உறுப்பு யாது?
24. வெளவால் ஒலி நமக்குக் கேட்குமா?
25.  இவ்வாறு தாவரம் வளர காரணம் யாது?
26. தூயநீர் எந்தத்தன்மையானது?

ரி.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

# க.பொ.த (உ/த) பொருளியல்

**01)** அ) பேரினப்பொருளாதார மாறிகள் நான்கினைக் குறிப்பிடுக.

i) மொத்தத் தேசிய உற்பத்தி அல்லது மொத்தத் தேசிய வருமானம்.
ii) தொழில் வாய்ப்பு மட்டம்
iii) பொதுவிலை மட்டம்.
iv) சென்மதி நிலுவை.

ஆ) பேரினப்பொருளாதார சமமின்மை என்றால் என்ன?

i) பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி அல்லது பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்தநிலை.
ii) பணவீக்கம் அதிகரிப்பு.
iii) தொழில் வாய்ப்பின்மை அதிகரிப்பு.
iv) சென்மதி நிலுவையின் தொடர்ச்சியான பற்றாக்குறை.

இ) பேரினப்பொருளாதார முகாமைத்துவம் என்ன?

மொத்தக் கேள்வி மட்டத்தை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்து வதைக் குறிக்கும். அதாவது மொத்தக் கேள்விக்கிணங்க பொருட்கள் சேவைகளின் நிரம்பல் காணப்படாவிடின் பணவீக்கம் ஏற்பட ஏதுவாகும். இதனால், உற்பத்தி, தொழில் வாய்ப்பு, சென்மதி நிலுவை போன்ற பேரினப் பொருளாதார மாறிகளில் பாதகமான போக்கு ஏற்பட ஏதுவாகும். இதனையும் கருத்திற்கொண்டே மொத்தக் கேள்வி மட்டத்தினை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துவதன்மூலம் பேரினப் பொருளாதார சமநிலையைப் பேணக்கூடியதாக இருக்கும். இது பேரினப் பொருளாதார முகாமைத்துவம் எனப்படும்.

ஈ) பேரினப்பொருளாதார முகாமைத்துவத்தின் இலக்குகள் அல்லது நோக்கங்கள் யாவை?

i) நிறை தொழில் மட்டம்.
ii) பொருளாதார சமத்துவம்.
iii) பொருளாதார உறுதிப்பாடு.
iv) உற்பத்தி தொழில்வாய்ப்பு.
v) மெய்வருமானம்.
போன்றவற்றைக் கூறலாம்.

உ) பேரினப்பொருளாதார முகாமைத்துவத்தைப் பேணக்கூடிய வகையில் கையாளப்படும் கொள்கைகள் எவை?

i) இறைக் கொள்கை அல்லது வரவு - செலவு திட்டக்கொள்கை.
ii) நாணயக்கொள்கை அல்லது பணப் புட்கை.
iii) சர்வதேச வர்த்தகமும், நாணய மாற்றுவீதமும் சார்ந்த கொள்கைகள்.
iv) நேரடி நடவடிக்கைகள்.

**02)** 2001 ஆம் ஆண்டு இலங்கையின் பேரினப்பொருளாதார சமமின்மையின் மோசமான வீழ்ச்சியைத் தொடர்ந்து, 2002 ஆம் ஆண்டு பேரினப்பொருளாதாரத்தில் மீட்சி காணப்பட்டது. அது தொடர்பான விளக்கம் பின்வருமாறு,

1) 2001 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 1.5 வீதம் எதிர்க்கணிய நிலையிலிருந்து 2002 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சி வீதம் 4 வீதமாக மேன்மையடைந்தது.

2) 2001 ஆம் ஆண்டு பணவீக்கவீதம் 14.2 வீதமாக இருந்து 2002 ஆம் ஆண்டு 9.6 வீதமாக வீழ்ச்சி கண்டது.

3) 2001 ஆம் ஆண்டு சென்மதி நிலுவையில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடு காணப்படாமையும், நாணய மாற்று வீதத்தில் வீழ்ச்சி வீதம் கூடுதலாக இருந்தது. ஆனால், 2002 ஆம் ஆண்டு சென்மதி நிலுவையில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடு காணப்பட்டதுடன், நாணயமாற்று வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி வீதமும் குறைவடைந்தது போன்றவற்றை வெளிப்படுத்தலாம்.

இத்தகைய பேரினப்பொருளாதாரம் மேம்பாட்டுக்குப் பின்னணியாக இருந்த காரணங்களாவன.

1) 2002 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் இடம்பெற்ற சமாதான ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட முன்னேற்றம்.

2) நீடித்த வரட்சி நிலைமை நீக்கப்பட்டமையினால் வேளாண்மை உற்பத்தி அதிகரித்தது.

3) நீடித்த வரட்சி நீக்கப்பட்டமையால் மின்வெட்டு நீக்கப்பட்டது. இதனால், கைத்தொழில்துறை, சேவைத்துறையில் ஏற்பட்ட விருத்தி.

4) கடல்வழி, வான்வழிப் பயணங்கள் மீது விதிக்கப்பட்ட இடர்காப்புறுதி வரிகள், காப்புறுதிக் கட்டணங்கள் விலக்கப்பட்டமை. இதனால், வெளிநாட்டு வர்த்தகத்திலும், சுற்றுலா சேவையிலும் ஏற்பட்டவிருத்தி.

5) உலக பொருளாதார மந்தநிலை நீக்கப்பட்டமை. குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் நாடுகளில் காணப்பட்ட பொருளாதார மந்தநிலை மீட்சி கண்டமை.

6) திறமையான இறைக்கொள்கையின் முகாமைத்துவமும், திறமையான நாணயக் கொள்கையின் முகாமைத்துவமும். போன்றவையே அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன.

சி.சிவகுமாரன் BA (Hons)
Dip - in - Ed. SLTS
கொக்குவில் இந்துக்கல்லூரி.

# மிதிவெடி அகற்றும் பணிகள்
# இம்மாத நடுப்பகுதியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி - இன்னமும் அகற்றப்படாமல் உள்ள இடங்களில் வெடிபொருட்கள் அகற்றும் செயற்பாடுகள், இந்தமாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என, யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டுக்கான மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள் முழுநிறைவான திட்டமிடலுடன் பூர்த்தி அடைந்திருப்பதால், புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பது குறித்த கலந்துரையாடல் பிரதமர் அலுவலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயற்பாட்டுக்கிளையினரால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தக் கலந்துரையாடலின் முடிவுகள் நாளை மறுதினம் யாழ்.செயலகத்தில் இங்கும் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகத்தினருக்குக் கிடைக்கப்பெற்றதும், புதிய வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயப் படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் 'ஹலோட்ரஸ்ட்' வெடிபொருள் அகற்றும் பிரிவினர், 'டெனிஸ்' மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் இராணுவ மிதிவெடி அகற்றும் பிரிவினர் முதலானோரின் பணிக்கான புதிய இடங்கள் வகுக்கப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவர்களது பணிகள் யாவும் இந்தமாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என, யாழ்.செயலக மிதிவெடிச் செயற்பாட்டலுவலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.(ப)

## காலாவதியான பொருட்கள் அழிப்பு

சுதுமலை பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் - மானிப்பாய் பகுதியில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருட்கள் அழிக்கப்பட்டன. கடந்த வெள்ளிக்கிழமை சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு ஆகிய இடங்களில், உள்ள தனியார் வர்த்தகநிலையங்களில் பால்மா வகைகள், பிஸ்கட் வகைகள் என்பன அழிக்கப்பட்டன.

சுதுமலை பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையில் மேற்கொண்ட பரிசோதனையிலே, காலவதியான பொருட்கள் இனம் காணப்பட்டன. அண்மையில் ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய இடங்களிலும் பாவனைக்கு உதவாத பொருட்கள் அழிக்கப்பட்டதாகவும், சுதுமலை பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (91)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

அறிவொளி சனசமூக நிலையத்தின் 2003 ஆண்டுக்கான பொதுக்கூட்டமும், 2004 ஆண்டிற்கான நிர்வாகத்தெரிவும் இடம்பெற்றது. புதிய நிர்வாகத் தெரிவில் சி.க. தம்பிராசா தலைவராகவும், சு.சுபநாதன் செயலாளராகவும், வே.விவேகானந்தன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (91)



சமாதானத்தை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாநாடொன்றிற்கான ஆலோசனைக் கூட்டத்தில் பௌத்த மதகுரு மாதம்பாகம அஸஜிதேரருடன் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் சி.வி.கே.சிவஞானம், பரமநாதன், க.ஜெயசேகரன் ஆகியோர் கலந்துரையாடுகின்றனர்.




ஏ - 9 பாதையால் வந்து மீளக்குடியேறிய மக்களின் நன்மை கருதி வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் வைபவத்தில், கண்பார்வைகுறைந்த பெண்மணி ஒருவருக்கு, யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பிரதிப் பணிப்பாளர் கே.ரீ.சிவபாதம் மூக்குக் கண்ணாடி வழங்குகின்றார். (17)

# இந்திய வம்சாவழித் தமிழர்கள் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாம்

### யாழ் செயலக உதவி அரச அதிபர் கோரிக்கை

(யாழப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்திய வம்சாவழியினரை குடியுரிமை பெறுவதற்கான விண்ணப்பத்தினைப் பெற்று, பூர்த்தியாக்கித் தருமாறு யாழ் செயலக உதவி அரச அதிபர் வேலும்மயிலும் கேட்டுள்ளார்.

2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரகாரம் - இந்திய வம்சாவழியினருக்கான குடியுரிமை வழங்கும் திட்டம் யாழ்ப்பாணத்திலும் அமுல் படுத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள இந்திய வம்சாவழியினர் தமது பிரதேச செயலாளர்களூடாக இந்த விண்ணபத்தினை அனுப்பி வைக்கமுடியும்.

இந்த விண்ணப்படிவங்கள் யாவும அந்தந்தப்பிரதேச செயலகங்களில் உள்ள அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த விண்ணப்படிவங்கள் மிக விரைவாக அனுப்பிவைப்பதனூடாக, இந்திய வம்சாவளி எனப்பதிவு செய்யப்பட்டிருப்போர், இலங்கைப் பிரஜா உரிமைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# பாடசாலைகளில் கால்கோள் விழா எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தரம் ஒன்றுக்குப் புதிதாக மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா அனைத்துப் பாடசாலைகளிலும் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் விழாவைச் சிறப்பாக நடாத்தி, அறிக்கை சமர்ப்பிக்கும்படி பாடசாலை அதிபர்களுக்கு வலயககல்விப் பணிப்பாளர் எஸ்.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அன்றைய தினம் முதலாம் தர மாணவர்கள், இரண்டாம் தரத்திற்குப புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்கள் அனைவரும் மாலை அணிவித்து, கௌரவித்து, அழைத்து செல்லப்படவுள்ளனர். இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்படுபவர் மதத் தலைவராகவே இருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் - "வாழ்க்கையில் ஒரு உறுதியான ஆரம்பம்" என்ற நூலும் பிரதியெடுக்கப்பட்டு, பாடசாலைகளில் புதிதாக அனுமதி பெறும் மாணவர்களின் பெற்றோர்களுக்கு வழங்கப்படவுள்ளது. விசேட நிகழ்வுகளாக - முதலாம் இரண்டாம் தர மாணவர்களின் ஆடல், பாடல் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது.

மாணவர்கள் மத்தியில் புரிந்துணர்வையும், நல்லொழுக்கத்தையும் வளர்க்கும் முகமாகவே இந்த நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்படவுள்ளதாகவும், இதன்மூலம் பாடசாலைக் கல்வியைப் புதிதாக ஆரம்பிக்கும் சிறுவர்களின் உள்ளத்தில் நல்ல சிந்தனையை வளர்க்க முடியுமெனவும் கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச)

## மரக்கன்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் 20 கலப்பு இன மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளதாக - யாழ்.மாவட்ட வனவள அதிகாரி மு.பிரபாகரன் தெரிவித்தார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்
முதலாவது அகவையில்



பெயர் : சு.விதுஷா
முகவரி : மட்டுவில் தெற்கு, மட்டுவில்.

# புலிகளுக்கோ தென்பகுதியினருக்கோ சமாதானம் தனித்துவமானது அல்ல!

### அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதானம் என்பது விடுதலைப் புலிகளுக்கோ, தென்பகுதியில் உள்ளவர்களுக்கோ மாத்திரமல்ல. அது அனைத்து மக்களுக்கும் உரியதாகும்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம், நயினாதீவு, ரஜமகா விகாரையில் புத்தபகவானின் திருவுருவச் சிலையை நிறுவுவதற்கு வந்த, அஸகிரிய மகாவிகாரை மகாநாயக்கர் புத்தரகித்த தேரர் - செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் தற்போது நிறுத்தப் பட்டுள்ளது. தமிழ் மக்கள் பதற்றத்துடன் இருக்கிறார்கள். அவர்களின் பதற்றத்தை நீக்கும் பொருட்டு - விடுதலைப் புலிகள், தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் ஆகிய அனைவரும் இணைந்து ஜனாதிபதியும், பிரதமரும் ஒன்றுபட்டு, மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். இரண்டு, மூன்றாகப் பிரிந்து நிற்கும் நாம் சகோதரத்துவத்துடன், பேதங்கள் இன்றி வாழவேண்டும் என, கௌதம புத்தரின் பேரினால் கேட்டுக்கொள்கின்றேன். சிங்கள மக்களின் பிரதான இடத்திலிருந்து நான் கேட்டுக் கொள்வது, நாங்கள் எல்லோரும் சமாதானத்துடன் வாழவேண்டும்.

ஜே.வி.பி. சமாதானப் பேச்சுக்களை நிறுத்தும்படி கேட்டால் அதற்கு நாம் உடன்படமாட்டோம். நாட்டிலுள்ள அரசியல் கட்சிளெல்லாம் - நாட்டை வளப்படுத்தும் பொருட்டு, இனமத பேதமின்றி, யுத்தமில்லாது வாழ்வதையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

எனவே, சமாதானத்திற்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்தால், அதனை நாங்கள் முழுமையாக எதிர்ப்போம்.

யாழ்ப்பாண மக்களுக்கு சொல்ல விரும்புவது என்னவென்றால் - தமிழ்மக்கள், சிங்கள மக்கள் இரு இனங்களும் இந்தியாவிலிருந்து வந்துதான் இங்கு பரம்பரையாக வாழ்கின்றோம். எனவே, நாம் இரண்டு இனங்களாகப் பிரிந்து நிற்காமல், சகோதரத்துடன் நாட்டை வளப்படுத்த ஒன்றுபட்டு வாழ்வோம் எனக் கேட்டுக்கொள்கின்றேன். இந்து சமயத்தவர்களைப் பௌத்தத்தின் ஒரு பகுதியாகவே நாம் கருதுகின்றோம் அவர் மேலும் எனவும் தெரிவித்தார்.

## முதியோர் இல்லம் திறந்து வைப்பு

கோப்பாய் - இருபாலைப் பகுதியில் சாயி முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்று இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த முதியோர் இல்லத்தின் உபதலைவர் க.அன்னலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழவில் - முதியோர் இல்லத்தினை யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக - இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

புதிதாகத் திறந்துவைக்கப்படும் இந்த முதியோர் இல்லத்தில் சேர விரும்பும் முதியோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# தியாகி அறக்கொடை நிலையத்தால் 800 வறிய மாணவர்களுக்கு சீருடை

### நிலைய இயக்குநர் தியாகேந்திரன்

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிலையத்தில், 800 பாடசாலை மாணவர்களுக்கு இன்று சீருடைகள் வழங்கப் பட்வுள்ளன என, நிலையத்தின் இயக்குநர் வாமதேவா தியாகேந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாவலர் கலாசார மண்டபத்திற்கு அருகில் இயங்கிவரும் எமது அறக்கொடை நிலையமானது, ஏழைகளுக்கு உதவும் வகையில், பல்வேறு உதவித்திட்டங்களை மேற்கொண்டுவருகிறது.

இந்த நிலையம் கடந்த 18 ஆண்டுகளாக - இலங்கையில் பல்வேறு சேவைகளையும் செய்து வருகின்றபோதிலும், கடந்த இரண்டு வருடங்களாகவே நிறுவன ரீதியாகச் செயற்படத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் பலபாகங்களிலும் செயற்பட்டுவரும் இந்த அறகொடை நிலையத்தினை, சுவிஸ்நாட்டில் எனது சொந்த உழைப்பின்மூலம், பெறப்பட்ட பணத்தைக்கொண்டே இயக்கிவருகின்றேன்.

பத்திரிக்கைகளில் விளம்பரப் படுத்தவிரும் பாமலேயே கடந்த 18 ஆண்டுகளாக எனது சேவையை இரகசியமாக மேற்கொண்டேன்.

விதவைகள், ஏழைகள், மாணவர்கள், முதியோர்கள், அநாதைகள், எனப் பல்வேறு தரப்பினருக்கும் பொருள், பணம், உதவிகளை வழங்கிவரும் எமது நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவுவிழா, இன்று நாவலர் கலாசார மண்டபத்திற்கு அருகிலுள்ள அதன் அலுவலகத்தில் கொண்டாடவுள்ளது.

இதனை ஒட்டியே - 800 வறிய மாணவர்களுக்குச் சீருடைத்துணிகள் வழங்கப்படவுள்ளன. இதனைவிட- விதவைகள், ஏழைகள், பயன்பெறும் வகையில் தொழிற்பயிற்சிகள், மாதக் கொடுப்பனவுகளும் வழங்கப் படவுள்ளன.

வன்னி, யாழ்ப்பாணம், பேருவளை, தலவாக்கலை. பொகவந்தலாவ முதலான இடங்களில் இந்த நிலையம் சேவையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கடந்த மாதம் ஒட்டுசுட்டான் பகுதியில் பால்பண்ணை ஒன்றை நிறுவுவதற்கும் இந்த நிலையத்தினுடாக உதவிபுரிந்துள்ளோம்.

இன்றைய தினம் உதவி பெறவிருக்கும் மாணவர்கள் மற்றும் பொது மக்களை உரிய நேரத்திற்கு சமூகம் தந்து, அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு நிலையத்தின் இயக்குநர் வாமதேவா தியாகேந்திரன் மேலும் தெரிவித்தார்.

## புத்தாண்டின் மலர்வில்...



**புத்தாண்டை முன்னிட்டு சுவிஸில் நடைபெற்ற விசேடநிகழ்வில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணித் தளபதிகளுள் ஒருவரான அமுதாப் நிகழ்த்திய உரையின் முழு விபரமும் இங்கே பிரசுரமாகிறது.**

# ஜெயசிக்குறு முதல் தீச்சுவாலைவரை...
# தர்மத்திற்கான ஒரு சத்தியப் போராட்டம்

உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ்மக்கள் புதுவருடத்தினைக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால், இப்பொழுது தமிழீழ மண்ணில் இரத்த வாடைகள் மாறாதுள்ளது.

தமிழீழ மண்ணில் தமிழர்கள் அச்சத்துடன் வாழுகின்றார்கள். இப்போதும் கண்ணீர் சிந்திக்கொண்டே இருக்கின்றார்கள். அப்படியான சூழ்நிலை இன்றும் ஏற்பட்டுள்ளது. நாம் புலம்பெயர்ந்த நர்டுகளுக்குச் செல்லுகின்றபோது, தமிழீழத் தேசியத் தலைவர் -தன்னுடைய சார்பிலே சில விடயங்களைக் கூறுமாறு அனுப்பி வைத்திருந்தார். விடுதலைப் போராட்டம் வாழ்வா, சாவா என்ற நிலையில் இருந்தபோது, உதவிகள் வழங்கிய தனது மக்களுக்கு நன்றிகளையும், வாழ்த்தையும் தெரிவிக்கும்படி பணித்திருந்தார்.

**ஒவ்வொரு அடி நிலத்துக்காக 40,000 சிங்களப் படையுடன் நாம் போராடினோம். எமது சுதந்திரம், மானத்திற்காகப் போராடினோம், விடுதலைப் புலிகளின் போர் ஆற்றலைப் பயன்படுத்தி போராடினோம். உணவு, உடை, காலைக் கடன்கூடக் கழிக்கநேரமில்லை. வீரச்சாவடைந்த எமது உடன்பிறப்புக்களின் உடல்களைப் பாதுகாத்துவைக்கப் போராடினோம்.**

இந்த வகையில் களங்களில் நெருப்பில் போராடி, நிமிர்ந்து தமிழீழ தாகத்துடன் உள்ள போராளி என்ற வகையில் எவ்வாறு நாம் எமது மண்ணில் இராணுவ சாதனைகளைப் படைத்தோம் என்பதைப்பற்றி, எமது உடன்பிறப்புக்களின் இரத்தங்கள், உயிர்களை விலையாக கொடுத்து சமாதானத்தினை ஏற்படுத்தினோம் என்பதுபற்றி நான் சற்று குறிப்பிட விரும்புகின்றேன்.

ஜெயசிக்குறு நடவடிக்கை 1997 ஆம் ஆண்டு 5 ஆம் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆக்கிரமிப்பின் நோக்கம், கண்டி வீதியினைக் கைப்பற்றுவது, தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றாக அழிப்பது, எமது தேசியத் தலைவரை அழிப்பது ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு, உலக நாடுகளிடம் சக்திமிக்க ஆயுதங்களைக் கொளவனவுசெய்து, இந்த இராணுவ நடவடிக்கையினை ஆரம்பித்தார்கள். எனவே, எமது தலைவர் கூறினார்- தமிழீழ மக்கள் சாவின் விளிம்பில் இருக்கின்றார்கள். சிங்கள இராணுவம் இரண்டு முனைகளினால் தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கைய ஆரம்பித்துள்ளது. இரண்டு முனைகளையும் எதிர்த்துப் போராடும்படி எமக்குப் பணிக்கப்பட்டது.

வன்னியில் யுத்தம் மூண்டது. ஒரு நாள், இரண்டு நாட்கள் அல்ல இரண்டு வருடங்கள் இப்போர் நடைபெற்றது.

சிங்களப் படைக்கும் தமிழ்ப் படைக்கும் இடையே ஏற்பட்ட போர் -நாளுக்குநாள் விரிவடைந்தது. சிங்களப்படை அசுர பலம் கொண்டு எம்மை அழிக்கமுற்பட்டது. எமது போராளிகள் எதிர்த்துப் போராடினார்கள். விழுந்து விழுந்து, எழுந்து நின்று எமது உரிமைக்காக உயிர்கள்ளைக் கொடுத்துப் போராடினோம்.

சிங்களப் படை நூறு மீற்றர் அகலத்தில் தனது ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கையினை ஆரம்பித்து 2533 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கைப்பற்றி, 80 கிலோ மீற்றர் நீளமான இராணுவ வேலியைப்போட்டது. எமது மக்கள் வாழ்வதற்கு வழியற்றவர்களாக விரட்டியடிக்கப்பட்டார்கள். ஒரு இனம் எவ்வாறு வாழக்கூடாதோ, அவ்வாறு இலங்கை அரசாங்கம் எமது மக்களை வாழவைத்தது. காட்டு மிருகங்களும், விசப்பாம்புகளும் வாழுகின்ற காட்டில் எமது மக்கள் வாழ்ந்தார்கள். 5000 படைகளின் உயிர்களைக் கொடுத்து 10,000 படைகளை அங்கவீனர்களாக்கிக் கோடிக் கணக்கான தமிழ் மக்களின் சொத்துகளை அழித்து சிங்களப்படை மாங்குளம்வரை வந்து நின்றது.

வெற்றி நிச்சயம் என்ற அகங்காரத்துடன் வந்த படைகளுக்கு, தோல்வி நிச்சயம் என்ற முகக்கரியைப் பூச எமது தலைவர் திட்டங்கள் தீட்டினார். வன்னியில் வாழ்ந்த எமது மக்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, எம்முடன் இணைந்து போர்க்களத்திலே தோளோடு தோள் நிற்பதற்கு அந்த மக்களுக்குப் பணிக்கப்பட்டது.

இதனடிப்படையில், 1999 ஆம் ஆண்டு 11 ஆம் மாதம் 2 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் கதையினை முடிப்பேன் என சிங்கள அரசு கூறிக்கொண்டிருந்தவேளை, எமது தலைவர் புதிய படை நடவடிக்கையினை ஆரம்பித்தார்.

மின்னல்வேகத் தாக்குதல் ஒட்டுசுட்டான் மண்ணில் ஆரம்பமானது. சிங்களப் படையினால் முகங்கொடுக்கமுடியவில்லை. ஊடறுத்துத் தாக்குதல், கரும்புலித் தாக்குதல், போராளிகளின் மின்னல்வேகத் தாக்குதல்களினால், சிங்களப்படை இரண்டு வருடத்தில் கைப்பற்றிய 2533 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பை, விடுதலைப் புலிகள் உங்களுடைய சார்பாக ஆறு நாட்களில் கைப்பற்றினார்கள். உலகம் வியந்தது. உலகம் வியக்கும் உலக சாதனையைப் புலிகள் இயக்கம் நிகழ்த்திக்காட்டியது. இந்த நிகழ்வுக்குப் புலம்பெயர்ந்து - உலக நாடுகளில் வாழும் மக்களின் உதவியே ஒருவகையில் காரணமாகுமெனத் தமிழீழ தேசியத் தலைவரே குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாகப் போர்முனை யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பியது. முதலாவது பரந்தன் படைத்தளம். 2000 சிறப்புப் படையினருடன் பலப்படுத்தப்பட்டிருந்த ஒரு பாரிய பெரும் தளம். தலைவர் சொன்னார் -ஓயாத அலைகள் ஆரம்பிக்கப்பட்டு சிங்களப் படைகளை 24 மணிநேரமும் நோயாளிமாதிரி வைத்திருக்க வேண்டுமென. நாம் சிங்களப் படையுடன் இரவில் மோதுவதைவிட்டு, பகலில் மோத வேண்டும். இதற்காக பரந்தன் படைத்தளம் தெரிவுசெய்யப்படுகின்றது.

1999 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 16 ஆம் திகதி பகல் 1 மணி- பரந்தன் படைத் தளம்மீது ஓயாத அலைகள் தொடர்கின்றது. சிங்களப் படைகளின் பாசறைகளை- உயிர்களையும், இரத்தங்களையும் கொடுத்து அழிக்கின்றோம். 23 மணித்தியாலத்தில் 2000 படைகளில் 1500 படைகளின் உடல்களைப் பிணமாக்கி, பரந்தன் படைத்தளத்தினைக் கைப்பற்றுகின்றோம்.

அடுத்ததாக ஆனையிறவு எமது இலக்காகத் தெரிவுசெய்யப்படுகின்றது. 240 வருடம் பழமைவாய்ந்த இரும்புக்கோட்டை என வர்ணிக்கப்பட்ட தளம். இதற்காக எமது தலைவர் திட்டங்களை வகுக்கின்றார். 1991 ஆம் ஆண்டு 7 ஆம் மாதம் 10 ஆம் திகதி ஆகாய, கடல வெளிச் சமரினைச் செய்து, 602 போராளிகளை இழந்து பின்னடைவைச் சந்தித்தோம். அந்தப் பின்னடைவு மூலம்தான் நாம் ஒரு பாடத்தினைப் பெற்றுக்கொண்டோம். கடற்புலிகள் பலமில்லாமையினால்தான் அந்தச் சம்பவம் இடம்பெற்றது. வெற்றிலைக்கேணியில் 8000 படைகளை இறக்கி, ஆகாய, கடல்வெளிச் சமரை முறியடித்தது சிங்கள அரசு.

அதேபோல, இலங்கை அரசுக்குச் சவாலக அந்த வெற்றிலைக்கேணியில் படைகளை இறக்கி, இராணுவம் எம்முடன் சமர்புரிந்ததோ, அந்த வெற்றிலைக்கேணியில் எமது 1500 போராளிகள் தரையிறக்கப்பட்டார்கள். அப்போது தலைவர் சொன்னார் - இன்று கடலால் சென்று ஆனையிறவுப் படைத்தளத்தினைக் கைப்பற்றப்போகின்றீர்கள் என. 1992 ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரால் தரப்பட்ட கடனை திருப்பிக்கொடுக்க 2000 ஆம் ஆண்டு சென்றோம். முதலாவது தொகுதியாக வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் இரண்டு கிலோமீற்றர் தூரமான நீர்ப் பரப்பில் எமது படை நகர்கின்றது. கடலில் சமர்தொடங்கியது. 20 இற்கு மேற்பட்ட சிங்களப் படையின் டோறாப் படகுகள், விமானப் படைகளுடன் -புலிகளின் கடற்படை போராடுகின்றது. போருக்கு முகம் கொடுக்கமுடியாத சிங்களப்படை - புறமுதுகிட்டு ஓடுகின்றது. இதனால், முதல்கட்டமாக 600 பேர் குடாரப்பு மண்ணில் தரையிறங்குகின்றார்கள். இந்த தரையிறக்கத்தில் 12 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாரர். இவர்களைக் குடாரப்பு மண்ணில் புதைத்தோம். பின்னர் இத்தாவில் நோக்கி எமது படைகளை நகர்கிறது.

இத்தாவில் ஊடாக ஆனையிறவுக்கு அப்பால் 15 கிலோமீற்றர் தொலைவில் தரைவழிப் பாதை எதுவுமற்று 40,000 சிங்களப் படையினர் இருந்த குகைக்குள்ளே, 1500 போராளிகள் சென்று சண்டையிட ஆரம்பித்தோம்.

அம்மா சந்திரிகா எல்லா இராணுவ அதிகாரிகளையும் கொழும்பிற்குக் கூப்பிட்டு, 1500 புலிகளையும் அழியுங்கள்! கேணல் பால்ராஜ்ஜை உயிருடன் பிடியுங்கள் என இலங்கையின் முப்படைத் தளபதி என்ற அகங்காரத்துடன் கட்டளை இடப்படுகின்றது. எல்லா இராணுவ அதிகாரிகளும் சண்டையினைத் தொடக்கினார்கள். ஒவ்வொரு அடி நிலத்துக்காக 40,000 சிங்களப் படையுடன் நாம் போராடினம். எமது சுதந்திரம், மானத்திற்காக போராடினோம், விடுதலைப் புலிகளின் போர் ஆற்றலைப் பயன்படுத்தி போராடினோம். உணவு, உடை, காலைக் கடன்கூடக் கழிக்க நேரமில்லை. வீரச்சாவடைந்த எமது உடன்பிறப்புக்களின் உடல்களைப் பாதுகாத்துவைக்க போராடினோம்.

தலைவர் கூறினார், கடலால் செல்லுகின்றீர்கள் - தரைவழிப் பாதையினால் நீங்கள் திரும்பிவரவேண்டும். நாங்கள் எடுத்தமுடிவு செய்கின்றோம் அல்லது செத்துமடிகின்றோம். இந்தக் கொள்கையுடன் போராடிய நாம், சிங்களப் படையின் அசுரபலத்தை அழித்தோம். ஆனையிறவைப் பிடித்தபிறகு தேசியக் கொடியை ஏற்ற தரைவழிப்பாதை ஊடாக சென்றது 400 போராளிகள் மட்டுமே. இந்த நடவடிக்கையினை முடித்துக்கொண்டு அடுத்த கட்டமாக யாழ்ப்பாணம் நோக்கிய எமது நகர்வுகளை மேற்கொண்டோம்.

அதாவது, அரியாலை செம்மணி, கனகம் புளியடி, யாழ்ப்பாணம் கச்சேரியடியிலிருந்து 1500 மீற்றர் தூரத்தில் காவலரண் அமைத்து, எங்களுடைய எல்லையினை அமைத்ததில் நானும் ஒருவன். அப்போதுதான் உலகநாடுகளின் சில அழுத்தங்கள் காரணமாக ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்தனர். இதன் காரணத்தினால்தான் யாழ்ப்பாணத்தினை யுத்தம் இல்லாமல் அடைய முடியும் என்று தலைவர் நம்பிக்கை கொண்டிருந்தார். நாம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஒரு தலைப்பட்சமாகச் செய்துகொண்ட பின்னர், இலங்கை இராணுவம் யுத்தத்தை ஆரம்பித்தது. இதனால், நாம் இரத்தம், உயிர்களைக் கொடுத்து மீட்கப்பட்ட பிரதேசத்தை இரத்தம், உயிர்களைக் கொடுத்து - பிரதேசத்தை கைவிட்டுச் சென்றோம். இலங்கை அரசாங் கத்தை வெல்லமுடியாமல் அல்ல. சமாதா னத்தை உலகுக்குக் காட்டுவதற்கு, சமாதானத் தின்மீது நாம் எவ்வளவு அக்கறை கொண் டுள்ளோம் என்பதை உலக நாடுகள் அறிவ தற்கு -

நான்கு மாதங்கள் சமாதானத்தினை கடைப்பிடித்தமையினால், 120 போராளிகளின் உயிர்களை இழந்தோம். இந்த சமாதான காலத்தில் ஒரு சிங்கள இராணுவ வீரனையாவது துப்பாக்கியால் சுடவில்லை. இந்தப் போர்நிறுத்தத்தினைப் பயன்படுத்தி, சிங்கள இராணுவம் ஆனையிறவுப் படைததளத்தினைக கைப்பற்ற, இராணுவ நடவடிக்கை செய்யத் திட்டமிட்டது. இதனால், 2001 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 24 ஆம் திகதி இரவு 12 மணிக்கு ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்திலிருந்து நாம் விலகுகின்றோம்.

நாம் யுத்தநிறுத்தத்திலிருந்து விலகி 5 மணித்தியாலத்தில் தீச்சுவாலை என்ற நடவடிக்கை சிங்கள இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையில் எமது பலத்தை சிங்களப் படைக்குக் காட்டினோம். இந்த யுத்தத்தில் அமெரிக்காவின் இராணுவப் பயிற்சி பெற்ற இராணுவத்தினர், இலங்கை முன்னணிப்படைப்பிரிவுகள் என 12,000 படைகள் குவிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 16 இற்கும் மேற்பட்ட தூர எறிகணைகள், நிமிடத்துக்கு 40 எறிகணைகளை வீசக்கூடிய நெடுந்தூர, குறுந்தூர ஆட்லறிகள், 50 இற்கும் மேற்பட்ட கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி எமது இராணுவ வேலிகளை உடைத்தார்கள். நாமும் எதிர்த்துப் போராடினோம். யுத்தம்மூண்டது. சிங்களப் படையா, தமிழ்ப் படையா! சந்திரிகாவா, பிரபாகரனா! தமிழர்களா, சிங்களவர்களா! என்ற கேள்விகளுடன் ஆரம்பிக்கப்பட்டு, மானப்போர் நடைபெற்றது.

அப்போது தலைவர் சொன்னார் ஆனையிறவைச் சிங்களப்படை கைப்பற்றுவதாக இருந்தால், புலிப்படை அழியவேண்டும். 73 மணித்தியாலம் போர் நடைபெற்றது. ஒவ்வொரு அடி நிலத்திற்கும் இரத்தம் சிந்திப்போராடினோம். 2000 படைகளை அழித்து, தீச்சுவாலை நடவடிக்கையை அணைத்தோம். தமிழர் வீரத்தினைக் காட்டினோம். இவ்வாறுதான் நாம் ஒவ்வொரு போரையும் செய்தோம். ஒவ்வொரு போராளியும் இறக்கின்றபோது, 'தலைவரை நம்புங்கள், எமது மக்களுக்காகப் போராடுங்கள்' என உச்சரித்தார்கள். நான் இவ்வார்த்தைகளைக் கேட்டேன். இதனால்தான் இந்த விடுதலைப் போராட்டம் அசைக்கமுடியாத அத்திவாரத்தினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் சிங்களப் படையிடமிருந்து புலிப்படை இரண்டு துப்பாக்கிகளைக் கைப்பற்றியது. 10 வருடம் கழித்து 1991 ஆம் ஆண்டு இலங்கையில் இரண்டு இராணுவம் உண்டு என்பதை நிரூபித்தோம். மீண்டும் 10 வருடங்கள் கழித்து 2001 ஆம் ஆண்டு வெல்லப் படமுடியாத சக்தி உண்டு என்பதனை நிரூபித்துக் காட்டினோம் இவற்றுக்கெல்லாம் எமது மக்கள்தான் காரணம்.

இந்த தற்காலிகச் சமாதானத்திற்காகக் கொடுத்த உயிர்கள் அதிகம். இப்போது, இலங்கை அரசாங்கத்துடன் ஒரு பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது. வடக்கு - கிழக்குத் தாயகம் சம்பந்தமாக அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, திருகோணமலை, வவுனியா ஆகிய 8 மாவட்டங்கள் 18,8887 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பு. இந்த வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் வாழப்பிறந்த 35 இலட்சம் மக்கள் - தாயகம், தேசியம், இன மக்களின் உரிமை சம்பந்தமாக என்றுமே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவில்லை.பேச்சுவார்த்தைகள் 83 வருடத்திற்கு முன்பு யாழ்ப்பாணத்தில் நடந்தது. இரண்டாவது பேச்சு வார்த்தை 1924 ஆம் ஆண்டு துரைச்சாமிஜயாவுக்கும், ஜெய்ப்பிரசாவுக்கும் இடையில் நடைபெற்றது, தீர்வுகிட்டவில்லை.

மூன்றாவது பேச்சுவார்த்தை - 1957 ஆம் ஆண்டு அப்பா பண்டாரநாயக்கவுக்கும், தந்தை செல்வாக்குமிடையில் நடைபெற்றது. நான்காவது பேச்சுவார்த்தை - 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்காவுக்கும், தந்தைசெல்வாக்குமிடையில் நடைபெற்றது. தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

அடுத்த பேச்சுவார்த்தை - 1985ல் விடுதலைப புலிகள் - ஜே.ஆர் உடன் பேசினார்கள். தீர்வு கிடைக்கவில்லை. ஆறாவது பேச்சுவார்த்தை- எமது மண்ணில் எம்மிடம் கேட்காது இலங்கை- இந்திய ஒப்பந்தம். தமிழ் மக்களின் வாழ்வில் ஓர் இருண்டகாலப்பகுதி. ஏழாவது பேச்சுவார்த்தை - 1990 ஆம் ஆண்டு பிறேமதாஸ அரசாங்கத்துடன் பேசப்பட்டது. 1994 ஆம் ஆண்டு அம்மா சந்திரிகாவுடன் பேசப்பட்டது. ஒன்பதாவது பேச்சுவார்த்தை - 2002 ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசினோம்.

தமிழினம் வாழப்பிறந்த இனம். எங்களுடைய இனத்தை வாழவிடுங்கள் என்று கேட்டபோது, சாவதற்கே அனுமதிக்கப்பட்டது. 1947 ஆண்டு சுதந்திரம் கிடைத்தது எனத் தெரிவிக்கப்படுகிறபோதிலும், 80,000 திமிழ் மக்களை இலங்கை அரசாங்கம் கொன்று குவித்துள்ளது.

**1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் சிங்களப் படையிடம் புலிப்படை இரண்டு துப்பாக்கிகளைக் கைப்பற்றியது. 10 வருடம் கழித்து 1991 ஆம் ஆண்டு இலங்கையில் இரண்டு இராணுவம் உண்டு என்பதை நிரூபித்தோம். மீண்டும் 10 வருடங்கள் கழித்து 2001 ஆம் ஆண்டு வெல்லப்படமுடியாத சக்தி உண்டு என்பதனை நிரூபித்து காட்டினோம். இவற்றுக்கெல்லாம் எமது மக்கள்தான் காரணம்.**

1972 ஆம் ஆண்டு எமது தலைவர் 18 வயதில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினை ஆரம்பித்து - 1982 ஆம் ஆண்டு முதலாவது போராளி வீரச்சாவடைந்தது தொடக்கம் - தற்போது 17,710 மாவீரர்கள் வீரச்சாவடைந்துள்ளனர். எமது விடுதலைக்காகத் தற்போது சுமார் 1,00,000 மக்கள் இறந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு அல்ல, தமிழர் உரிமைகளைப் பெறுவதற்கே ஆரம்பிக்கப்பட்டது.

தற்போதுள்ள சமாதான சூழ்நிலை தொடர்வது இலங்கை அரசிலேயே தங்கியுள்ளது. எமது பழைய பகைமைகளை மறந்து, புதிய ஆண்டில் தமிழர்கள் தமது சொந்த இடத்தில், சுதந்திரத்துடன் வாழவேண்டுமென உறுதியெடுத்தக்கொண்டு -

இந்திய அரசு கூறியது - எம்முடன் விடுதலைப்புலிகள் முட்டிவிட்டார்கள். அழிவடையப் போகின்றார்கள் என. ஆனால், உலகத்தின் 4 ஆவது வல்லரசை எதிர்த்துப் போராடியபோது, எமது தலைவருக்கு வயது 33. இன்று தலைவருக்கு 50 வயது. காய்களை நகர்த்தி எவ்வளவு சாதனைகளைப் படைத்துள்ளார்.

நாம் சிந்திய இரத்தத்திற்குச் சுகந்திரமாக வாழவேண்டும். நீங்கள் எதிர்பார்த்ததை தலைவர் செய்வார். எப்படையை எதிர்த்தும் எமது தேசத்தைக் காப்போம். தர்மத்திற்காகப் போராடுகின்றோம். நிச்சயம் வெல்வோம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகழ்ச்சியின் கெட்டாரை உள்ளுக தாம்தம்*
*மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.*

திருக்குறள்.

## நமது நோக்கு

### சார்க் தீர்மானங்களே; சில எண்ணங்கள்

சந்தேகங்கள், நம்பிக்கையீனங்கள், குழப்பங்கள் மற்றும் ஒருமைப்பாட்டின்மை ஆகிய சிக்கல்களுக்கு மத்தியில் சார்க் நாடுகளில் உச்சிமாநாடு - பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் அரங்கேறி முடிந்துள்ளது.

தென்னாசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே அரசியல் ரீதியான முரண்பாடுகளுக்கு அப்பால் ஓர் ஒருங்கிணைந்ததும், பரஸ்பர புரிந்துணர்வுடன் கூடியதுமான சமூக, பொருளாதார மற்றும் அபிவிருத்திரீதியிலான வளர்ச்சிகளை, ஒத்துழைப்பினை உருவாக்குவதன்மூலம் உலக பொருளாதார ஒழுங்கின் பிரகாரம் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் செயற்பாடுகள் காரணமாக, அபிவிருத்தி குன்றிய சின்னஞ்சிறு நாடுகள் மேலும் நெருக்குதலுக்கு உள்ளாகும் ஆபத்து உருவாகக்கூடிய நிலைமையைத் தவிர்த்து, சவால்களுக்கு முகங்கொடுத்து நிற்கும், வலுவை ஏற்படுத்தும் இலக்குடன்தான் சார்க் என்று அழைக்கப்படும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அமைப்பு கிட்டத்தட்ட இரு தசாப்த காலத்தைத் தனது வரலாற்றில், தனது இலக்கில் எந்தளவினை எட்டியுள்ளது என்ற கேள்விக்கான பதிலை கம்பீரமாகச் சொல்வது கடினமாகும்.

சார்க் அமைப்பிலுள்ள இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மாலைதீவு, இலங்கை என்ற அனைத்து உறுப்பு நாடுகளிலும் உள்நாட்டு அரசியல் குழப்பங்களிலும், ஜாதிய இன மற்றும் மதமோதல்களாலும், மொழி முரண்பாடுகளாலும் பல்வேறு வகையில் தலையைப் பிய்த்துக்கொள்ளும் நிலையிலேயே ஆட்சிப்பொறுப்பிலுள்ளோர் திணறிக்கொண்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படையானதாகும்.

அதேபோல், இந்த நாடுகளுக்கிடையேயுள்ள அரசியல் முரண்பாடுகள், எல்லைப்புற மோதல்கள், வல்லாதிக்கப்போர் எனத் தொடரும் அயலக நாடுகளுடனான பகை மற்றும் வெறுப்புணர்வு போன்ற பலவும் இந்த நாடுகளுக்கிடையேயான நேச உறவுத் தன்மையை போலித்தனமான ஒன்றாகவே காட்டிநிற்கின்றது எனலாம்.

இந்த நிலையில் இந்த நாடுகளிடையேயான ஒன்றிணைந்த ஒருமுகப்பட்ட நோக்கிலான ஒத்துழைப்புச் செயற்பாடு என்பது, சாதனைகள் என்பது நிகழ்த்திவிட முடியாத - பலவீனமானதாக- இருப்பதில் வியப்பொன்றும் கிடையாது.

இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் ஒட்டமுடியாத விரிசல்-- பாகிஸ்தான் - பங்காதேஷுக்கிடையே தொடரும் பகைமுரண்பாடுகள் - சிறிலங்கா மீதான இந்திய மேலாதிக்கப் போக்கு - நேபாளத்திற்கும் இந்தியாவுக்குமிடையிலான கசப்புணர்வுகளுடன் கூடிய உணர்வுநிலை.

- மாலைதீவில், இலங்கையில் உள்நாட்டுப் பிரச்சினைகள், யுத்தம் இப்படியாகத் தொடரும் சார்க் உறுப்பு நாடுகளின் பிரச்சினைகள் யாவும் சிநேக பூர்வமாக, பேச்சுக்களின்மூலம், புரிந்துணர்வுடன், பிராந்தியநலன் கருதியேனும் தீர்க்கமுடியாதநிலை தீவிரமாகிக்கொண்டே வருகின்றது.

ஆனாலும், சார்க் அமைப்பு எதையும் பிரமாதமாகச் சாதிக்க முடியாத நிலையிலும், வெறும் சந்திப்புக்களை உச்சி மாநாடு நடத்தி, தீர்மானங்களை எடுத்து, அவற்றைப் பிரசாரப்படுத்தி தனது இருப்பை உணர்த்தும் வகையில் தொடர்ந்து இயங்குவது வேடிக்கையானதுதான்.

சிறிலங்காவில் இந்த அமைப்பின் உச்சிமாநாட்டை எங்கு நடத்துவது என்ற சிக்கல் ஏற்படும் அளவுக்கும், சந்திப்புக்களை எப்படி மேற்கொள்வது என்பது குறித்துத் தீர்மானம் எடுக்கமுடியாதநிலை உருவாகுமளவுக்கு சூழல் ஏற்பட்டதுண்டு.

இது இந்த அமைப்பின் பலவீனமான கட்டமைப்பின் தன்மையைச் சுட்டிக்காட்டப் போதுமானதாகும்.

இன்னொருவகையில், தென்னாசியப் பிராந்தியத்தில் ஒரு வலுவான கூட்டமைப்பு உருவானதை மேற்காதிக்க உலகம் விரும்பியது கிடையாது என்பது மற்றொரு நிராகரிக்க முடியாத உண்மையாகும். அமெரிக்கா தலைமையிலான மேற்குலகில் உலகமயமாக்கல் கொள்கைக்கு, இப்படியான பிராந்திய அமைப்புக்களின் ஸ்திரத்தன்மை ஏதோ ஒருவகையில் எப்போதாவது பாதிப்பை ஏற்படுத்தவேசெய்யும் என்ற மேற்குலகின் சந்தேகம் இந்த அமைப்புகளின் பலவீனங்களைப் பயன்படுத்தி அவற்றின் செயற்திறனைக் குறைக்கும் முயற்சிகளை மறைமுகமாகப் பல்வேறுவகைகளில் மேற்கொள்வதுமுண்டு. அது வேறுவகையாக ஆய்வுக்குரிய விடயமாகும்.

இந்தவகையில், இதுவரையில், தென்னாசியப் பிராந்தியத்தின் - அப்பிராந்தியத்திலுள்ள - தனித்துவ, பொருளாதார, சமூக, அரசியல் ஸ்திரத்தன்மைக்கு எந்தவகையிலும் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாதநிலையில் உள்ள சார்க் அமைப்பில், நடந்துமுடிந்த உச்சி மாநாட்டில் பல்வேறு விடயங்கள் பற்றி பேசப்பட்டு, சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டு, வழமைபோல் அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது வேறுவிடயம். இந்தச் சந்தேகம் ஏற்பட கடந்தகால அனுபவங்களின் தாக்கங்களே காரணமாகும்.

சார்க் அமைப்பின் உறுப்பு நாடுகளிடையே பரஸ்பர புரிந்துணர்வு, விசாலமான நம்பிக்கை, உறுதியான செயற்பாட்டுத்திறன் இல்லாதவரை அந்த நாடுகளின் உள்நாட்டுக் குழப்பங்களுக்கு உறுதியான தீர்வு காணப்படாதவரை, ஒரு நாட்டின் உட்பிரச்சினைகளுள் இன்னொரு நாடு மேலாதிக்க சிந்தனையுடன் தலையீடு செய்து, குழப்பத்தை ஏற்படுத்தாதவரை இத்தகைய உச்சி மாநாடுகளின்போது, எடுக்கப்படும் தீர்மானங்கள் யாவும் கோப்புக்களில் அறிக்கைகளாகி உறங்கிக் கிடக்கவே செய்யும்.

அதுவே இதுவரைகாலமும் நடந்தும் வந்துள்ளது.

## நாடும் நடப்பும்




# சூழ்நிலைகளைப் பிரச்சினையாகப் பாராது உணர்வுகளாகப் பார்க்கவேண்டும்!

## வண.பிதா அனுரபெரேரோ

நாட்டில் நிலவும் சூழ்நிலைகளை, பிரச்சினைகளாகப் பார்ப்பதைவிட்டு, அவற்றில் மக்களின் உணர்வுகள் புதைந்துள்ளன என நோக்கும்போது, உரிய தீர்வுகளை இலகுவாக எட்டமுடியுமென, மக்கள் சமாதான அரங்கின் நெறிப்படுத்தற் குழுவைச் சேர்ந்த வண.பிதா அனுரபெரேரோ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள சமாதான மாநாடு தொடர்பான ஆலோசனைக்கூடடம் - யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நேற்று நடைபெற்றபோதே, அவர் இதனைத் தெரிவித்தார். அங்க அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

நாட்டிலே போர் மூளுமோ என்ற பயவுணர்வு மக்கள் அனைவருக்கும் உண்டு. இலங்கைக்கென பொதுவான பிரச்சனையாக இனப்பிரச்சனைகள் இருந்தாலும், அதற்குக் காரணமாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் ஒவ்வொரு பிரச்சனைகள் உள்ளன.

உதாரணமாக காலியிலுள்ள மக்களின் பிரச்சனைகளும், யாழ்ப்பாணத்திலுள்ள மக்களின் பிரச்சனைகளும், நிறைய வேறுபாடுகளை கொண்டவை. எனவே, மாவட்டங்கள் தோறும் அங்குள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது.

இதற்கு மக்களின் உணர்வுகளையும், கருத்துக்களையும், வெளிப்படுத்தகக்கூடிய களமொன்று தேவையாகவுள்ளது. அதற்காகவே, சமாதான மாநாடுகளை நடத்துகிறோம். இவை மூலமாக, மக்களின் குரலாக - ஜனாதிபதி முதற்கொண்டு சகல அரசியற்கட்சித் தலைவர்களுக்கும் அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கருத்து வெளியிட்ட யாழ்ப்பாணம் வர்த்தகசங்கத் தலைவர் க.ஜெயசேகரன், இன்று குடாநாட்டின் இதயமாக விளங்கும் யாழ்.நகரப் பகுதியிலே படையினரின் ஆக்கிரமிப்பு பலமாகவுள்ளது. இந்த மக்களது இயல்பு வாழ்விற்கும், வர்த்தகர்களின் நடவடிக்கைகளுக்கும் தடையாகவுள்ளது.

ஏ-9 பாதை திறக்கப்படட பின்னர், பிற இடங்களைச் சேர்ந்தவர்களின் வருகை யாழ்ப்பாணத்திற்கு அதிகரித்துள்ளது. இந்தநிலையில் ஹோட்டல்களின் தேவை குடாநாட்டைப் பொறுத்தவரையிலே அவசியமாகவுள்ளது. ஆனால் - படையினரும், பொலிசாரும் மூன்று முக்கிய ஹோட்டல்களான சுபாஸ், ஞானம்ஸ், அசோகா ஆகியவற்றைத் தம்வசம் வைத்துள்ளனர்.

வைத்தியசாலைக்குப் பின்னால் இராணுவமுகாம் அமைந்திருக்கவேண்டிய அவசியமில்லை. எதற்காக இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ளது என்பது கேள்விக்குறியாகவுள்ளது. இது தொடர்பான விடயங்களையும் சமாதான மாநாடுகளிலே வெளிப்படுத்தவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் - யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது (ச)

### பலாலி விமானத் தளத் சீரமைப்புப் பணிகளுக்கு இந்திய அங்கீகாரத்தை பார்த்திருக்கும் விமானப்படை

இந்திய உயர் ஸ்தானிகராயலத்தில் இருந்து அங்கீகாரம் கிடைத்ததும், எவ்வித தீர்மானமுமின்றி பலாலி விமானத் தளம் சீரமைப்புபணிகள் ஆரம்பிக்கப்படுவிடும் என, விமானப் படைத்தளபதி ஏயர் மார்ஷல் டொனால்ட்பெரேரோ தெரிவித்துள்ளார்.

விமானத்தள நிர்மாண சேவைகள் யாவும் வீதி அபிவிருத்த அதிகாரசபையினரால், இந்திய அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

விமானத்தளப் பிரதேசத்தை மட்டுமல்லாது, அதனைச் சுற்றியுள்ள, அதனோடு தொடர்புடைய பகுதிகளையும் புனரமைப்புச் செய்வதற்குவேண்டிய நிதியுதவிகளை வழங்குவதற்கு இந்தியா ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்தப புனரமைப்புக் பணிகளுக்கு, சுமார் 280 மில்லியன் ரூபாய்கள் செலவாகுமென, உள்ளக மதிப்பீடுகள் தெரிவித்தாலும்கூட, இந்தியா இதற்கு 500 மில்லியன் ரூபாய்கள் செலவாகு மென்று மதிப்பீடுசெய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவின் இந்த நடவடிக்கையானது, பாதுகாப்பு விடயங்களில் இரு நாடுகளும் நெருங்கிச் செயற்படுவதற்கான மற்றொரு முன்னேற்றகரமான முயற்சி என்றும் கூறப்படுகிறது.

# சமாதானத்தை நிலைநாட்டும் மாநாடு யாழ்ப்பாணத்தில்!

## மக்கள் சமாதான அமைப்பு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நீடித்த சமாதானத்தை நிலை நாட்டுவதற்கும், சமாதான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்குமான மாநாடொன்று, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. மக்கள் சமாதான அரங்கு என்ற அமைப்பே இந்த மாநாட்டிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுவருகிறது.

இது தொடர்பான ஆரம்பகட்டக் கலந்துரையாடலொன்று, அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மக்கள் சமாதான அரங்கைச் சேர்ந்த வண.மாதம் பாகம அஸஜிதேரா், அருட்தந்தை அனுரபெரேரோ, யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் தலைவர் எஸ்.பரமநாதன், இணைச்செயலாளர் எ.கே.சிவசுப்பிரமணியம், எம்.தர்மரட்ணம், உறுப்பினர்கள் சி.வி.கே.சிவஞானம், க.ஜெயசேகரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமாதான மக்கள் அரங்கானது - நாட்டில் நீடித்த நிலையான சமாதானம் ஏற்படுவதற்காகப் பாடுபட்டுவரும் அமைப்பாகும். சமாதான முன்னெடுப்புக்களில் மக்களின் பங்குபற்றலை உறுதிசெய்தல், அரசியல் நிகழ்வுகளின்போது மக்களின் தேவைகளையும், அபிலாஷைகளையும், விழுமியங்களையும் ஒருங்கிணைத்தல், மக்களின் கருத்துக்களைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் - அரசியல் நிகழ்ச்சிநிரலை விரிவுபடுத்தல் என்பனவே இந்த அமைப்பின் குறிக்கோளாகும்.

இவற்றைச் செயற்படுத்துவதற்காக - இருபத்தைந்து பேரைக்கொண்ட நெறிப்படுத்தும் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் சர்வமதப் பிரதிநிதிகள் உட்பட பலர் அங்கம வகிக்கின்றனர். முதற்கட்டமாக - காலி, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலேயே பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கல்விமான்கள், பெண்கள், இளைஞர்கள், தொழிற்சங்கங்கள், மதங்கள் உட்பட சகல அரசியற்கட்சிகளும், போருக்கெதிரான பங்காளிகளாக செயற்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதே இந்தக் குழுவினரால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பிரதான செயற்திட்டமாகும். இதன்மூலமாக, ஜனநாயக உரிமைகளை மேம்படுத்துவதே பிரதான நோக்கமாகும்.

அந்தவகையிலேயே - யாழ்ப்பாணத்தில் சமாதான மாநாடொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று, எதிர்வரும் 17 ஆம் திகதி கியூடெக் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் 52 அமைப்புக்களின் பிரதிநிதிகளும், சமாதான மக்கள் அரங்கைச்சேர்ந்த தென்னிலங்கைப் பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

ஒரு கல்விக்களச் சுற்றுலா அனுபவக் கட்டுரை - பகுதி I -

# இன முரண்பாட்டின் விளைவுகள்; ஆய்வுக்கு தயார் நிலையில் வட பகுதி...

தென்கிழக்குப் பல்கலைக்கழக அரசறிவியல் பிரிவு மூன்றாம் வருட மாணவர்களும், விரிவுரையாளர்களும் நான்கு நாள் கல்விக்களச் சுற்றுலா ஒன்றினை விரிவுரையாளர்கள் எம்.ஏ.ஜப்பார் தலைமையில் கடந்த ஓகஸ்ட் 3, 4, 5, 6 ஆகிய தினங்களில் மேற்கொண்டனர். மூன்றாம் வருடத்தின் 2 ஆம் பருவத்திற்கான ஒருபாட அலகாகிய - இலங்கை அரசியலில் பிரச்சினைகள் எனும் பாட அலகின் கீழான் ஒரு கல்விக்களச் சுற்றுலாவாகவே இது அமைந்திருந்தது. அந்த வகையில் இலங்கையில் இனமுரண்பாட்டின் விளைவுகளை- குறிப்பாக அரச பயங்கரவாதம், பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம், இளைஞர் அமைதியின்மை என்பனவற்றின் விளைவுகளையிட்டு மாணவர்களுக்கு நேரடியாக அனுபவரீதியான அறிவினை பெற்றுக்கொடுப்பதும், இன்றைய அரசாங்கத்தின் இன முரண்பாட்டுத் தீர்வுயோசனைகள் குறித்து, விசேடமாக இடைக்கால நிர்வாகசபை குறித்து முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட மக்களது கருத்துக்களைப் பெறுவதும் இந்தக் கல்விச் சுற்றுலாவின் நோக்கமாக இருந்தது. இதனால், இந்தச் சுற்றுலா இனமுரண்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்ட வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி காலை 6.30 மணியளவில் பல்கலைக்கழகத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து, வவுனியா மாவட்டத்தின் யுத்தச் சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளையும், இடம்பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்களையும் பார்வையிட்டு, அன்றே யாழ்ப்பாணத்திற்கு பயணம் ஆரம்பித்தது. உண்மையில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான பயணம் - இன்றைய யுத்த நிறுத்த சூழ்நிலையில் எவ்வளவு சிரமாக இருந்திருக்கும் என்பதை அறிந்த எங்களுக்கு யுத்தசூழ்நிலையில் பயணம் எவ்வாறு படுசிரமமாக இருந்திருக்கும் என்பதை ஓரளவு ஊகிக்கமுடிந்தது.

வவுனியா - ஓமந்தையில் படையினரின் சோதனை நிலையமும், தமிழழ விடுதலைப் புலிகளின் சோதனை நிலையமும் சுமார் 100 மீற்றர் இடைவெளியில் அமைந்திருந்ததை நேரில் கண்டபோது, வியப்பைத்தந்தது. அரச படையினரின் சோதனைகள் முடிவடைந்து யாழ்.குடாவுக்குள் செல்வதற்கான அனுமதியைப் பெற்று, விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடிக்குச் சென்றபோது, விடுதலைப் புலிகள் குறித்து பய உணர்வுடனிருந்த எம்மை, அன்பு வணக்கம் கூறி அவர்கள் வரவேற்றது நெஞ்சை குளிரச் செய்தது. இனிய தமிழ்மொழியில் அவர்கள் நிர்வாகம் செய்யும் விதம், நிர்வாக இலகுபடுத்தலுக்காக அவர்கள் செய்திருக்கும் ஏற்பாடுகள் எல்லோரையும் கவரக் கூடியதாக இருந்தது. ஒரு பரந்த நிலப்பிரப்பில் அமைக்கப்பட்டுள்ள அவர்களது சோதனைச் சாவடியில், ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தனித்தனிப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், பயணிகளுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் செய்துகொடுக் கப்பட்டுள்ளன. ஒரு புதிய நாட்டுக்குள் நுளைவதற்குண்டான அனைத்துப் பதிவு நடவடிக்கைகளும் நடந்தேறுவது போன்றிருந்தது. ஒரு வகையில் பொதுமக்களுக்குச் சிரமமாக இருந்து போதும், புலிகளின் நிர்வாக செயற்பாட்டுக்கான ஒரு விடயமாகவே அவர்கள் கருதுவதாகத் தோன்றியது.

விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியில் வன்னி பெருநிலப் பரப்பினைக் கடப்பதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொணடு, அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதி ஊடாகச் செல்லும் யாழ் - கண்டி நெடுஞ்சாலை ஊடாகப் பயணம் ஆரம்பித்தது. பாதையை இப்பொழுதுதான் திருத்தியமைத்துக்கொண்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் (அரசாங்க பேருந்துகள் சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படவில்லை.) தமிழழ போக்குவரவுக் கழகம் என்ற பெயரிலான பேருந்து சேவை நடைபெறுகிறது. ஆனால், அரச அலுவலக வாகனங்களும், தனியார் வாகனங்களும் பயணம் செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளது.

நெடுஞ்சாலைக்கான குறிப்பிட்ட பகுதி மட்டுமே கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பிரதேசமாக இருக்கின்றன. மற்றைய பகுதிகளில் எல்லாம் கண்ணிவெடிகள் அபாயம் என்ற பதாதைகளே தொங்கிக்கொண்டிருக்கின்றன. பாலை மரச்சோலைகள் நிரம்பிய வன்னி பெருநிலப்பரப்பு- கண்ணிவெடிகள் அபாயத்திற்குட்பட்ட பிரதேசமாக இருப்பது, தமிழ் மக்களது பொருளாதாரத்தில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை எம்மால் அனுமானிக்க முடிந்தது. புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம், முறிகண்டி, கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு, பளை எனப் பயணம் தொடர்ந்தது. ஒரு காலத்தில் தமிழ் மக்கள் மட்டுமன்றி எல்லா இன மக்களும் ஒட்டி உறவாடிய பிரதேசங்கள் - இன்று அநேகமாக காடுகளாகவே காட்சி தருகின்றன. முக்கியமான சில ஊர்களில் மட்டும் சிறுசிறு குடிசைகளில் மக்கள் ஆங்காங்கே வசித்து வருகிறார்கள். அவர்களும் சுதந்திரமாக இயங்கமுடியாதவாறு கண்ணிவெடிகளால் கட்டுண்டு கிடக்கிறார்கள்.

ஒரு காலத்தில் மிகவும் புகழ்பெத்திருந்த கிளிநொச்சி நகரம்- இனறு யுத்தத்தின் கோர விளைவுகளை சுமந்துகொண்டு காட்சி தருகின்றது. அடுக்கு மாடிகளில் வாழ்ந்த மக்கள்- இன்று உடைந்த மாடிகளில் பேருக்கு சீவிக்கின்றார்கள். ஆனாலும், தற்போது தமிழ் ஈழத்தின் தலைநகராகத் திகழும் இந்த நகரம் - விடுதலைப் புலிகளின் அனைத்து நிர்வாகக் கட்டமைப்புக்களையும் கொணடிருக்கிறது. தமிழீழ மாவட்ட நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், புலிகளின் சுகாதார நடுவகப் பணியகம், தமிழீழ வைப்பகம், அரசியற்துறை நடுவப்பணியகம், தமிழீழப் போக்குவரவுக் கழகம், தமிழீழ ஒலிபரப்புக் கழகம், என அவர்களின் நிர்வாகக் கட்டமைப்புக்களுடன், மாவட்டச் செயலகம், மாவட்ட வைதத்தியசாலை, வலயக் கல்விப் பணிமனை, மத்திய கல்லூரி எனச் அரசின் நிறுவனங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு வகையில் இரட்டை ஆட்சி முறையாகத் தோன்றினாலும், அரசாட்சிக்கு அவசியமான பாதுகாப்பு விவகாரத்தில் விடுதலைப் புலிகளே முழுக் கட்டுப்பாடு உடையவர்களாக இருப்பது அவர்களது கைமேலோங்கியிருப்பதையே சுட்டிக்காட்டுகிறது.



எம்.ஏ.ஜப்பார் (விரிவுரையாளர்)
அரசறிவியல் பிரிவு,
சமூக விஞ்ஞானங்கள் துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களது நிர்வாகம் சிறப்பாக நடந்தேறுவதை அவதானிக்கமுடிந்தது. நகரப் பகுதியில் நெடுஞ்சாலையில் வாகனங்கள்- குறித்த வேகத்திற்கு அதிகளவில் செல்லும்போது, அதனை அளவீடுசெய்து தண்டப்பணம் அறவிடுவதிலிருந்து மிகச்சிறிய விடயத்திற்குமான அவர்களின் நிர்வாகத்திறனை அறியமுடிந்தது. அவர்களின் ஆட்சிப் பிரதேசங்கள் எங்கும் தமிழ் மொழிப் பிரயோகம் சிறப்பாக அமுல் செய்யப்படுகிறது. இலங்கையின் நேரத்தைவிட அவர்களது பிரதேச நேரம் 30 நிமிடங்களால் வேறுபட்டிருகிறது. (அதாவது இலங்கையின் முன்னைய நேரம்)

கிளிநொச்சி நகரை அடுத்து இரசாயன தொழிற்சாலைக்குப் புகழ் பெற்றிருந்த பரந்தன் நகரம் - யுத்தத்தின் அழிவுகளைச் சுமந்து நிற்கின்றன. காடுகளும், உடைந்த கட்டடங்களும்தான் வருவோரை வரவேற்கின்றன. உடைந்த கட்டடங்களுள் சிறு கடைகள், துவிச்சக்கர வண்டிகளில் சில மனிதர்கள் என மக்கள் சீவிப்பதற்கான சில அடையாளங்கள் தெரிகின்றன. ஆனால், அதனை அடுத்துள்ள ஆனையிறவுப் பிரதேசம் யுத்தத்தின் கோர விளைவுகளால் காட்சி தருகின்றது. ஒரு காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் இராணுவக் காவலரண்களால நிரம்பப்பெற்றிருந்த ஆனையிறவு, இன்று அப்படி ஒன்று இருந்ததற்கான தடயமே இல்லாதிருக்கிறது. ஆனையிறவைத் தாண்டும்போது முறிந்த பனைகளும், முறிந்த தென்னைகளும் வருவோரை வரவேற்கின்றன. ஒரு காலத்தில் குடாநாட்டின் பொருளாதாரத்தில் மிகமுக்கிய பங்குவகித்த ஆயிரமாயிரம் பனை மரங்கள் - தலைகள் அற்ற முண்டங்களாக காட்சி தருகின்றன. கலாநிதி ராஜினி திரணகம எழுதிய 'முறிந்த பனைகள்' (**Broken Palmyra**) வாசித்த எமக்கு அப்பொழுதுதான் அதற்கு மேலும் அர்த்தம்புரிந்தது. பனை மரங்களுக்கே இந்தக்கதி என்றால் அங்குள்ள வீடு, உடமைகளைப் பற்றி கூறவேண்டுமா?

யுத்த காலத்தில் பெயர் பெற்றிருந்த பளை - முகமாலையை அடைந்தபோது, மீண்டும் ஓமந்தைச் சம்பவங்கள் நினைவுக்கு வருகின்றன. ஆனால், புலிகளின் சோதனைச் சாவடியை மாலை 5.30 மணிக்கு முன் கடந்தால்தான் யாழ்ப்பாணம் செல்லமுடியும் என்பது ஒரு கட்டளை. எமக்கு இரண்டு நிமிடம் தாமதித்துவிட்டது. 5.30 இற்கு சர்வதேச கண்காணிப்பாளரான ஐ.சி.ஆர்.சி. பிரதிநிதி - எல்லைப் பிரசேத்தைவிட்டு வெளியேறிவிடுகிறார்கள். விடுதலைப் புலிகளுடன் பேசியவுடன் எல்லைப் பிரதேசத்தைத் தாண்ட அனுமதித்தார்கள். ஆனால், இரு தரப்பினரிடையேயும் பலத்த சோதனையைத் தாண்டிய பின்னரே யாழ்.குடாவுக்குள் நுழையமுடிந்தது. (தொடரும்)













# தமிழர் தாயகத்தில் கிடைத்துள்ள தொன்மையான சுடுமண் சிற்பங்கள்





வன்னியின் துணுக்காய் மல்லாவியில் தொல்கால சுடுமண் சிற்பங்கள் உட்பட்ட சுடுமண் தொல்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மல்லாவியின் வயற்பகுதி ஒன்றில் வரம்புப் பாதை துப்பரவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில் - சுடுமண் சிற்பங்கள் மக்களால் கண்டெடுக்கப்பட்டன.

பாதை துப்பரவுப் பணியின்போது மண்வெட்டிகளால் பொருட்கள் உடைபட்டும் உள்ளன.

இருந்தும் அப்பொருட்கள் அப்பகுதி மக்களின் விழிப்புணர்வு மிக்க செயற்பாடுகளால், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனிடம் கையளிக்கப்பட்டன.

இந்த சுடுமண் சிற்பங்கள் பெண் உருவங்களாக உள்ளன. அங்கு 5 மனித உருவங்கள் இதுவரை எடுக்கப்பட்டுள்ளன. ஒன்று தலைப்பகுதியாக மட்டும் கிடைத்தது. மற்றொன்று தலைமுதல் இடுப்புவரையான பகுதியுடன் கிடைத்திருக்கிறது, இன்னொன்று தலை முதல் அடி வரையும், மற்றொன்று தலை முதல் மார்பு வரையும், வேறொன்று முண்ட மாகவும் கிடைத்துள்ளன.

இதைவிட இரு குடவடிவ மட்கலங்களும் கிடைத்துள்ளன. இவற்றில் ஒவ்வொன்றிலும் 3 திசைகளில் துளைகள் காணப்படுகின்றன. அத்துடன், இதற்குரிய மூடிகளாகக் கருதப்படுபவையும் எடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட, சிதைந்த ஏராளமான ஓடுகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்விடத்தில் மேலும் அகழ்வு செய்யப்படின் ஏராளமான சான்றுகள் கிடைக்கலாம்.

இதற்குமுன் மிகத் தொன்மையான சுடுமண் சிற்பங்கள் மிக நேர்த்தியான கலைநயத்துடன் கிளிநொச்சி - ஆனைவிழுந்தான் காட்டுப் பகுதியில் எடுக்கப்பட்டிருந்தன.

ஆனைவிழுந்தான் சுடுமண் சிற்பங்களை விட இவை நேர்த்தி குறைந்தவையாக உள்ளன.

அத்துடன், மேலும் ஆனைவிழுந்தான் சுடுமண் சிற்ப முகங்களுக்கும், மல்லாவி சுடுமண் சிற்ப முகங்களுக்கும் இடையே அதிகளவிலான வேறுபாடுகள் உள்ளன.

1960 களில் கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் தொல்லியல் ஆணையாளர் கலாநிதி **S.U.** தெரனிய கலை சுடுமண் சிற்பங்களை கண்டெடுத்தார்.

இவையுடன் ஒத்தவையாக ஆனைவிழுந்தான் சிற்பங்கள் இருக்கின்றன.

மல்லாவி சிற்பங்கள் இவற்றிலிருந்து வேறுபட்டுள்ளன.

உருத்திரபுர சிற்பங்கள் 2000 ஆம் ஆண்டுகளிற்கு முற்பட்டவை என **S.U.**தெரனியகலை தெரிவித்திருந்தார்.

இவற்றைவிட கிளிநொச்சி- உருத்திரபுரத்தில் எடுக்கப்பட்ட சுடுமண் சிற்பங்கள் - வவுனியா நகர தொல்பொருட்கலைச்சாலையில் உள்ளன.

தமிழர்களின் மிகத்தொன்மையான கலை

தி. தவபாலன்

வடிவங்கள் சுடுமண் ஆக்கங்களிலேயே உள்ளன. சிந்துவெளி முதல் தமிழகம் - ஆதித்த நல்லூர்வரை, தமிழர் தாயகத்தில் வன்னியில் தமிழரின் தொன்மை சொந்தக்கலை சான்றுகளாக சுடுமண் சிற்பங்களே உள்ளன.

தமிழரிடம் கற்சிற்பம் உருவானபோது, அதில் அந்நியக் கலப்புகள் வந்துவிட்டன.

சுடுமண் சிற்பக்கலைகள் தமிழரின் கிராமியத் தெய்வங்களுக்குரியவையே தவிர, ஆரிய கடவுளருடையவையல்ல.

இதன்மூலம் சுடுமண் சிற்பங்களின் பெறுமதியை தமிழ்மக்கள் உணர்வர்.

# லிபியாவுக்கான பொருளாதாரத்தடை தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும்!

## அமெரிக்க அதிபர் புஷ் தெரிவிப்பு



லிபியாவுக்கான பொருளாதாரத் தடையை தொடர்ந்தும் அமுல்படுத்தப்போவதாக - அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். லிபியா தனது நாட்டில் உள்ள பேராபத்தைத் தரக்கூடிய ஆயுதங்ளை அகற்றுவதற்கும், அவற்றைப் பார்வையிடுவதற்கும் முன்வந்ததற்காக அமெரிக்கா சென்ற மாதம் பாரட்டுத் தெரிவித்தது. ஆனாலும் சொற்கள் யாவும் செயலுருவத்திற்கு மாற்றப்பட வேண்டும் எனவும் புஷ் தெரிவித்தார்.

இதேவேளை, லிபியாவை உலக சமூகத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை பிரித்தானியா தெரிவித்துள்ளது. மேலும், லிபியாவின் வெளிநாட்டு அமைச்சர் சல்காமை பிரித்தானியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார்.

1998ஆம் ஆண்டு லிபியாவின் புலனாய்வாளர்களால், லொக்கபீ என்ற இடத்தில் நடத்தப்பட்ட விமானம் மீதான தாக்குதலில் 270 பிரயாணிகள் கொல்லப்பட்டிருந்தனர். கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டை லிபியா வழங்கியிருந்தது. இதன்பின், ஐ.நா. சபை லிபியாவிற்கு எதிரான தடையை நீக்கியிருந்தது.

மேலும், அமெரிக்கா லிபியா மீதான தடைகளை நீக்கும்போது, அமெரிக்க வங்கிகளில் உள்ள லிபியாவின் 1 பில்லியன் டொலர்களை அந்த நாட்டுக்கு உரிமைகோர வழி வகுக்கும்.

# இளவரசி டயானாவின் மரணத்துக்கு அவரது வண்டிச் சாரதியே காரணமாம்!

## பிரான்ஸில் நடந்த விசாரணையில் தெரிவிப்பு



(லண்டன்)

இங்கிலாந்தின் முன்னாள் இளவரசி டயானாவின் மரணத்துக்கு - அவரது வண்டிச் சாரதி மதுபோதையில் வண்டியை செலுத்தியதே காரணமாகுமென, பிரான்ஸில் நடைபெற்ற விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளவரசி டயானாவின் மரணம் 1997 ஆம் ஆண்டு பாரிஸில் அமைந்துள்ள சுரங்கப் பாதையொன்றில் இடம்பெற்றது.

இதனிடையே, டயானாவின் முன்னாள் சமையல்காரர் போல் புரெல் டயானாவால் எழுதப்பட்ட கடிதமொன்றை, தான் மரணவிசாரணை அதிகாரியிடம் கொடுப்பதற்கு விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், அக்கடிதத்தில் - டயானா தன்னைக் கொல் வதற்கு சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதா கத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கடிதம் கொல்லப்படுவதற்கு 10 மாதங்களுக்கு முன் எழுதப்பட்டிருந்தது. சென்றவருடம் டயானாவின் மரணம் தொடர்பான சம்பவங்கள், புத்தகமாக போல் புரெலினால் எழுதப்பட்டிருந்தது.

டயானாவின் மரணம் சம்பவித்த நேரத்தில், அதே வண்டியில் பயணம் செய்து மரணமடைந்த டயானாவின் காதலர் டொடி அல்பயிட்டின் தந்தையான மொகமட் அல் பயிட் தனது மகனின் மரணத்துக்கு சதி முயற்சியே காரணம் எனவும், முழுமையான பகிரங்க விசாரணை நடத்தவேண்டும் எனக் கேட்டிருந்தார்.

மேலும், டயானா மரணமடைந்த நேரத்தில் அதே வண்டியில் பிரயாணம் செய்து உயிர்தப்பியிருந்த டயானாவின் பிரத்தியேக பாதுகாவலர் ரெகுவார் ரீஸ் ஜோன் - தான் எதையும் கூறமுடியாத அளவுக்கு மனநிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

## ஆப்கான் குண்டுவெடிப்பு; பத்து பொதுமக்கள் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தென்பகுதி நகரான கந்தகாரில் ஏற்பட்ட குண்டுவெடிப்பில் - 10 இற்கு மேற்பட்ட ஆப்கானிய மக்கள் கொல்லப்பட்டதாக, அந்த நகரத்தின் உதவிப் பொலிஸ் அதிகாரியான சலீம் கான் பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தார்.

மேலும் 15 பேர்வரை காயமடைந்துள்ளதாகவும், குண்டுவெடிப்பு நடைபெற்ற பிரதேசத்திற்கு அருகில் அமைந்திருந்த கட்டடங்களும், வாகனங்களும் சேதமடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். அண்மைக்காலமாக கந்தகார் நகரில் தலிபான்களின் தாக்குதல் அதிகரித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட வாகனம் - இராணுவத் தளம் ஒன்றின் முன்னால் அமைந்திருந்த கார் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கப் படைகள் ஓய்வுபெறுவதற்கு புதிய நடைமுறை

ஈராக், குவைத், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுக்ளில் பணிபுரியும் படையினரை சேவையிலிருந்து விலகுவதைத் தவிர்த்துக்கொள்வதற்கு புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்த அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இதன்மூலம், அடுத்த சில மாதங்களில் பதவியில் இருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும், விலகிக் கொள்பவர்களும் தொடர்ந்தும் தமது படைப்பிரிவில் கடமையாற்ற வேண்டியுள்ளது. மேலும், மூன்று ஆண்டுகள் தமது பதவியைத் தொடர்பவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக 10 ஆயிரம் டொலர்கள் வழங்குவற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது.

புதிய நடைமுறையினால் 7000 இற்கும் மேற்பட்ட, பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டிய படைவீரர்கள் தொடர்ந்தும் சேவையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.





## இவர்களைக் கண்டீர்களா?





கடந்த 13.12.2003 சனிக்கிழமை இரவு நாவாந்துறை கடற்கரை வீதி நூல்கட்டும் ஆசீர்வாதம் என்பவரது வீட்டில் நடைபெற்ற திருட்டுச் சம்பவத்தின்போது அவருடன் வீட்டில் தங்கியிருந்த படத்தில் காணப்படும் தம்பதிகளான வவுனியாவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சுபாஸ்கரன் பேசாலை, சின்னக்கரிசலைச் சேர்ந்த (சுலோசனா) சுபாஷினி ஆகியோரை 19.12.2003 வெள்ளிக்கிழமையிலிருந்து காணவில்லை. இவர்களைக் கண்டவர்கள் எமது விலாசத்திற்கோ, 0712 - 373404 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோஅறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

78/2, கடற்கரை வீதி,
நாவாந்துறை தெற்கு,
யாழ்ப்பாணம்.

ஆசீர்வாதம் இம்மனுவல்
நூல் கட்டுபவர்.

(579)


## ஊர்சுற்றி எழுதுவது

இலங்கையில் இப்பொழுது நிலவும் ஜனநாயகத்துக்கு என்ன பெயர்?

ஜனநாயகம்தான். இதுவும் ஜனநாயகம்!

அம்மையாருக்குச் சகல அதிகாரங்களும் இருக்கின்றன. அமைச்சர்களை நியமிக்கலாம், நீக்கலாம். அமைச்சின் செயலாளர்களையும் நியமிக்கவும், நீக்கவும் அம்மையாருக்கு அதிகாரம் இருக்கிறது.

பிரதமர் ரணில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த சமயம் மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற அம்மையார் பாதுகாப்பு அமைச்சின் செயலராக இருந்த ஒஸ்ரின் பெர்னாண்டோவையும் பதவி நீக்கியிருந்தார். இந்தச் சமயம் ஒஸ்ரின் பெர்னாண்டோ லண்டனிலிருந்தார்.

இப்படி நடக்குமென்று தெரிந்தோ, தெரியாமலோ தாம் தமது அலுவலகத்திலிருந்து கடைசியாகப் புறப்பட்டபோது, தமது வேலைகள் எதையும் பாக்கி வைக்காமல் தமது வீட்டுக்குரிய தனது சொந்தக் கோப்புக்களையும் எடுத்துச் சென்று விட்டிருந்தாராம்.

நான் இப்போது வேலையற்ற ஒரு பட்டதாரி என்று, வேலைநீக்கம் செய்யப்பட்ட மறுநாள் அவர் சொன்னார்.

இப்பொழுது சில தினங்களுக்கு முன்னர் மற்றும் ஒரு அமைச்சுச் செயலாளர்களைச் சந்திரிகா அம்மையார் அதிரடியாகப் பதவி நீக்கம் செய்திருக்கிறார்.

இப்படித் திடீர் பதவி நீக்கங்களினாலும் ஆட்சியிலுள்ள அரசாங்கத்துக்குப் பல்வேறு தொல்லைகளைக் கொடுக்க முடியும்.

அம்மையாருக்கும் பிரதமர் ரணிலுக்கும் இடையேயான அதிகாரப் போட்டி முடிவுக்கு வரும் அறிகுறி தெரியவில்லை என்றார் நண்பர்.

இந்தச் சமயத்தில் கண்டியிலுள்ள மல்வத்தை மகாநாயக்க தேரரைச் சந்தித்த பெரிய வர்த்தகர் - ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடரச் செய்வதற்கு உதவும்படி கேட்டுக்கொண்டார். இந்தச் சமாதானப் பேச்சு தொடரா விட்டால் இலங்கைக்கு உறுதியளிக்கப்பட்ட வெளிநாட்டு உதவி கிடைக்காமல் நாடு அதல பாதாளத்தை நோக்கிச் செல்ல நேரிடும் என்று அவர் மடாதிபதியிடம் சொன்னார்.

இதைக் கேட்டதும் மல்வத்தை பீடாதிபதிக்குக் கோபம் வந்துவிட்டது. வெளிநாடுகளையே நாங்கள் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. நமது நாட்டைப் பற்றியும், நாட்டின் அபிவிருத்தி பற்றியும் டி. எஸ். சேனநாயக்கவின் பின் வந்தவர்கள் எவருமே அக்கறை கொள்ளவில்லையென்று சீறினார்.

நாட்டில் நடைபெறும் தேர்தல்களும் வெறும் கேலிக்கூத்து என்றும் மல்வத்தை பீடாதிபதி கண்டித்தார். தேர்தல் எல்லாம் காடைத்தனமாக இருக்கிறது என்று அவர் சொல்லியிருக்கிறார். இதைக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரிதான் செய்தி வெளியிட்டிருக்கிறது.

மல்வத்தை பீடாதிபதி சொன்னது சரியோ பிழையோ என்று நான் சொல்ல முடியாது. சமாதானப் பேச்சைத் தொடர்வதற்கு அவரிடம் உதவி கேட்ட வர்த்தகர்களைக் குறை சொல்ல முடியாது.

இப்போதைய அரசியல்வாதிகள் தங்கள் சொல்லைக் கேட்பதில்லையென்றும் பீடாதிபதி சொன்னாராம்.

இதேசமயம், யாழ்ப்பாணம் நயினாதீவில் புதிய புத்த விக்கிரகத்தை அங்குள்ள விகாரையில் பிரதிஷ்டை செய்வதற்கு அஸ்கிரிய பீடாதிபதி வந்திருந்தார்.

யுத்தம் வேண்டாம், சமாதானமே வேண்டும் என்று இரு இனங்களும் உறுதிகொள்ள வேண்டும்மென்றும் போதனை செய்து சென்றிருக்கிறார்.

இந்தப்போதனையை அவர் இங்கு சொல்லிப்பிரயோசனமில்லை. போரைக் கொண்டு வந்தவர்களும், தமிழ்மக்கள் மீது அட்டூழியங்களைக் கட்டவிழ்த்துவிட்டவர்களும் யார் என்பதும், இப்போது சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக அமைதியுடன் காத்திருப்பவர்களும் யார் என்பதும் அஸ்கிரிய பீடாதிபதிக்குத் தெரியாதா?

பீடாதிபதிகள் நாட்டின் அமைதியையும், ஐக்கியத்தையும் உண்மையிலேயே விரும்பினால், அரசியல் போதனையைவிடுத்து புத்தர் பிரானின் போதனையை மட்டும் செய்துவந்தால் போதுமே!

இன்னொரு விஷயம் - அரசியலிலும், ஆட்சியிலும் அதிரடி நடவடிக்கைகளை எடுப்பதில் பெண்களுக்குத் தனிவிருப்பம்.

இதில், தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா முன்பே வழி காட்டியிருந்தவர்தான். இப்போதும் மக்களைச் சந்திக்கச் சென்ற இடத்தில் மக்கள் சொன்ன குறைகளைச் கேட்டதும், அந்த இடத்திலிருந்தே இரு அமைச்சர்களைப் பதவியிலிருந்து நீக்கும் உத்தரவுகளைப் பிறப்பித்தார்.


## பதவி வெற்றிடம்

2004 ஆம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் பிரபல காப்புறுதி நிறுவனம் தனது சேவையை விரிவுபடுத்தும் முகமாக பிரதேச பிரதிநிதிகளை உள்வாங்கல் செய்யவுள்ளது.

*தகைமை :-*

18 வயதிற்கு மேற்பட்ட இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். வயது வந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். பகுதிநேர வேலையாக இதைச் செய்ய விரும்புபவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

இவற்றுக்கான விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் 16.01.2004 வெள்ளிக்கிழமை.

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-*

விளம்பர இல.20,
மே/பா நமது ஈழநாடு,
இல.267, நாவலர் வீதி,
யாழப்பாணம்.

(576)



## கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்

விவசாய பீடத்தின் விரிவுரையாளரான பா.ஜெயசீலன் அவர்களின் சகோதரன் பா.ஜெயரஞ்சன் அவர்கள் அகால மரணமடைந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(582)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கல்குடா பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 110 குடும்பங்கள் மீளவும் குடியமர்வு!

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கல்குடாப்பகுதியில் உள்ள நீலா வோடைப்பிரதேசத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டு யுத்த நடவடிக் கையால் இடம்பெயர்ந்த 410 குடும் பங்களில் 110 குடும்பங்கள் தற் சமயம் மீளக்குடியமர்ந்துள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரி வித்துள்ளது.

எனினும், 12 வருடங்களின் பின் னர் மீளக்குடியேறியுள்ள மக்க ளுககு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என மீளக் குடியமர்ந்த மக்கள் புகார் தெரிவித் துள்ளனர்.

மின்சாரம், குடிநீர்வசதி, வைத் திய வசதி போன்ற அடிப்படை வசதி கள் இன்றி வாழ்ந்துவருவதாகத் தெரி விக்கப்படுகிறது.

இவ்வாறு மீளக்குடியேறியுள்ள மக்களில் 81 குடும்பங்களுக்கு மாத்திரமே இதுவரையில் 25 ஆயி ரம் ரூபா நிவாரணம் வழங்கப்பட்டுள் ளது. ஏனையவர்களுக்கு இன்னமும் இந்த வசதிகள் செய்துகொடுக் கப்படவில்லை.

இதனால், தற்காலிகமாக அமைக் கப்பட்ட குடிசைகளில் வாழ்வோர் அன்றாட பாவனைப் பொருட்கள் எது வும் இன்றி பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கி வருவதாக புனர்வாழ் வுக்கழகம் தெரிவித்தது.

(01)



நாற்சந்தி

'ஊடகவியலாளர்கள் சந்திப்பு என்று கூறி அழைப்புவிடுத்து பலாலி படைத் தளத்திற்கு கூட்டிச்செல்லப்பட்ட பத்திரிகை யாளர் அங்கு படையினரால் அவமதிக் கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டுள்ளனராம்.'

'ஏன் திருப்பி அனுப்பினார்களாம்...'

'அனுப்பியவர்கள் படையினர்... ஏனென்று கேட்கமுடியுமே...வா என்றால் போறதும்...போ என்றால் திரும்பி ஓடிவாற தும் வெட்கக்கேடான விடயம்தான்... மணியம்...'

'இல்லை கனகு... ஊடகவியலாள ருக்கு அழைப்புக்கொடுக்க வந்தவை... ஆர் ஆர் வரப்போ...ம்... அடை யாள அட்டை இலக்கத்துடன் பெயர்களைத் தாருங்கள் என ஊடக நிறுவனங்களை அடிக்கடி நச்சரித்து விபரம் எடுத்துப் போட்டு... அவர்களைக் கூட்டிச்சென்று அவமதித்தது தான் சகிக்கமுடியாததாகும்...'

'அமைச்சர் கூட அதுபற்றி அக்கறைகொள்ளவில்லையாமே...'

'அமைச்சருக்கு எத்தனையோ சோலி இருக்கும்...'

'பௌத்தமத பீடாதிபதிகளும் மௌனமாகத் தானே இருந்திருக்கிறார் கள்.'

'எங்கடை பத்திரிகையாளர்கள் சிங்களவர்களா அவர்கள் சீற்றம் கொண்டு நடவடிக்கை எடுக்க...'

'இனிமேல் என்றாலும் இந்த அரச அழைப்புக்கள் விடயத்தில் எங்கட ஊடகவியலாளர்கள் எச்சரிக்கையாக இருந்தால் சரி...'

'மதியாதார் முற்றம் மிதிக்காதே என்று சொல்லுறியோ...?'

'இல்லை இல்லை... மதிப்போரை மட்டும் மதியுங்கள் இல்லாவிட்டால் மிதித்து தள்ளுங்கள் என்று சொல்லுகிறேன்.'

தெருவாசி

# அரசியல்...

ஜனாதிபதி செயலகம் கூறுகையில்,

இருதரப்பு உறவுகள் பற்றிய இரு நாட்டுத் தலைமைகளும் கலந்து ரையாடியதாகவும், இரு நாட்டு வர்த் தக நடவடிக்கைகளையும் அபிவி ருத்தி செய்வது குறித்தும் விசேட மாக சப்ரா ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்துவது குறித்து ஆரா யப்பட்டதாகத் தெரிவித்தது.

# நோர்வே...

இதேவேளை, நோர்வேத்தூதரகத் தின் இரண்டாம் நிலை செயலாளர் நேற்று திருகோணமலைக்குச் செல்வ தாக இருந்தபோதிலும் அங்கு செல்ல வில்லையெனத் தெரிவிக்கப்படு கிறது. (04)

# மின்சார....

கட்டண அதிகரிப்பால் பாதிப்பு ஏற் படாது. மேலதிகமாகக் கிடைக்கும் வருமானம் திறைசேரிக்கு அனுப்பப் படும் என்றும் அவர் மேலும் தெரி வித்தார்.

# பாதுகாப்பு...

இவற்றுக்கு மேலதிகமாக வெடி பொருட்கள், ஆயுதம், சட்டவிரோத குடியமர்வைத் தடுக்கும் விடயங்க ளும் மீண்டும் உள்துறை அமைச் சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

சென்றவருடம் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஜனாதிபதி இந்த நிர்வாகத்தினை யும், திணைக்களங்களையும் பாது காப்பு அமைச்சின் கீழ் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (01)

# ரோக்கியோ...

தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இந்த மாநாட்டில் இலங்கையின் புனர்வாழ்வு, புனர மைப்பு நடவடிக்கைகளுக்கு என உதவிவழங்கும் நாடுகள் வழங்குவ தாக உறுதியளிக்கப்பட்ட நிதி யுதவிகளைப் பெறுவது தொடர் பாகவே இந்தச் சந்திப்பில் ஆரா யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அத்துடன், இலங்கையின் தற் போதைய அரசியல் நெருக்கடி நிலை, புலிகளுடனான பேச்சுக்கள் ஆரம்பிக்கத் தடையாக உள்ள விட யங்கள் குறித்தும் கிறிஸ் பற்றனும் மிலிந்தமொறகொடவும் ஆராய்ந்த தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# போதைப்பொருளைக் கட்டுப்படுத்த மன்னாரில் விழிப்புணர்வு வாரம்!

## அரசியற்துறை நடவடிக்கை

மன்னார் மாவட்டத்தில் அதி கரித்துவரும் போதைப்பொருள் பாவனையினைக் கட்டுப்படுத்து வதற்கு அரசியற்துறை இன்றுமுதல் ஐந்து தினங்கள் விழிப்புணர்வு வாரமாக அனுஷ்டிக்க ஏற்பாடு செய் துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதனால் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற் காக விழிப்புணர்வுக் கருத்தரங்கு களை நடத்தவுள்ளது.

இந்த நடவடிக்கையை மன்னார் மாவட்ட அரசியற்துறையினர் ஏற் பாடு செய்துள்ளனர். இந்தக் காலப் பகுதியில் போராளிகளும் பொது அமைப்புக்களும் இணைந்து பொதுக் கூட்டங்களையும், துண்டுப்பிரசுரங்க ளையும், சுவரொட்டிகளையும் விநி யோகித்து விழிப்புணர்வை ஏற் படுத்தவுள்ளனர்.

# கொலைப் பயமுறுத்தலுக்குள்ளான பொ.ஐ.முன்னணி எம்.பி முறைப்பாடு!

(கொழும்பு)

இனம்தெரியாத நபர்களால் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் புத்தளம் நாடாளுமன்ற உறுப்பினர் தச நாயக்கா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

புத்தளம் பகுதியில் நடந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட வேளை ஒருவர் தன்னை கைத் துப்பாக்கிகொண்டு மிரட்டியதாகவும், இன்னொரு நிகழ்வில் கைக்குண்டு ஒன்றினை வீசமுற்பட்டபோது மெய் பாதுகாவலர் பாதுகாத்துள்ளதாக வும் அவர் பொலிஸாருக்கு கொடுத்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதனடிப்படையில் தனக்கு ஏற் பட்டிருக்கும் இந்த கொலை அச் சுறுததலைத் தடுப்பதற்கு உரிய நட வடிக்கை எடுக்குமாறு தசநாயக்க பொலிஸாரிடம் கோரியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோது பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகவும், புத்தளம், சிலாபம் பொலிஸ் ஒரு வரின் கைத்துப்பாக்கி இவரது வீட்டி லிருந்து மீட்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. (01)

# பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது!

## அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி யுடன் பேசித் தீர்வு காண்பதற்கு அர சாங்கம் தயாராக இருப்பதாக நீர்ப் பாசன, நீர்முகாமைத்துவ அமைச்ச ரான காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்தார்.

பொலநறுவையில் கல்மித்தக் குளத்தினை புனரமைக்கும் வைபவத் திலே கலந்து கொண்டு உரையாற்று கையில் அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரை யாற்றுகையில் -

பிரதமருக்கு பாதுகாப்பு அமைச் சினை வழங்கி அதிகாரத்தினை பகிர்ந்து கொள்வதற்காக, அனைத் துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்தக் கட்சிகளின் தலைவர்களை கொண்ட குழுவொன்றை அமைக்க வுள்ளன.

இந்த குழுவுக்கு ஜனாதிபதியே தலைமை தாங்கவேண்டும். சமா தான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதி பதி சிந்தித்துச் செயற படவேண்டும்

பல அபிப்பிராயங்களைக் கொண்டி ருக்காது ஒரு கொள்கையினை கொண்டிருக்கவேண்டும். அரச தலைவர்களினால் இவ்வாறுதான் செயற்படமுடியும். இவ்வாறு செயற் படாதுவிட்டால் நாம் முடிவு ஒன்றை எடுக்க நேரிடும். நாம் நாட்டை சாபக்கேடான நிலைக்குத் தள்ள தயாராக இல்லை. பல கொள்கைக ளுடன் அரச தலைவர்கள் செயற் பட்டால் நாட்டின் செயற்திட்டங்கள் வீழ்ச்சி காணும் நிலைக்கு தள்ளப் படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பயங்கரவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு சார்க் மாநாட்டில் ஒப்பந்தம் கைச்சாத்து!

(இஸ்லாமாபாத்)

தெற்காசியப் பிராந்தியத்திலி ருந்து பயங்கரவாதத்தினை ஒழிப் பதற்கான ஒப்பந்தத்தில் சார்க் நாடு கள் நேற்று கையெழுத்திட்டுள்ளன.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லா மாபாத்தில் கடந்த ஞாயிறு ஆரம்ப மான சார்க் உச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

சார்க் நாடுகளின் தலைவர்கள் தலைமையில் நடைபெற்ற இறுதி நாள் நிகழ்வில், பாகிஸ்தான் பிரதமர் தலைமையில் நடைபெற்றது. நேற் றைய நிகழ்வில், தெற்காசிய நாடுக ளின் பாதுகாப்பு மற்றும் தீவிரவாதத் தினை ஒழிப்பதற்கான உடன்படிக் கையிலும், தெற்காசியாவில் தடை யற்ற வர்த்தக மண்டலத்தை ஏற் படுத்துவதற்கான உடன்படிக்கை யிலும் சார்க் நாடுகளின் வெளியுற வுத்துறை அமைச்சர்கள் கையெழுத் திட்டுள்ளனர். இதனையடுத்து சார்க் நாடுகளுக்கிடையிலான ஒத்து ழைப்பு, பொருளாதார முன்னேற்றம், வறுமை ஒழிப்பு உள்ளிட்ட விடயங் களை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமாபாத் பிரகடனம் வெளி யிட்டதைத் தொடர்ந்து பன்னிர ண்டாவது சார்க் உச்சிமாநாடு உத்தி யோகபூர்வமாக முடிவடைந்தது.

# தனியார்துறை ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும்!

## தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

வரவு - செலவுத்திட்டத்தின்படி அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப் பட்டுவந்த சம்பள உயர்வு - தனி யார் நிறுவனங்களின் ஊழியர்களுக் கும் வழங்கப்பட இணக்கம் காணப் பட்டுள்ளதாக தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களுக்கு வழங் கப்பட்ட சம்பள உயர்வு, தனியார் ஊழியர்களுக்கு வழங்கப்படாமை யால் அவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டனர். தனியார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது குறித்து பேச்சுக்கள் நடைபெற்றன. இப்பேச் சுக்கள் மூலமே சில தனியார்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதற்கு இணக்கம் காணப் பட்டது.

இலங்கையில் தனியார் துறை யில் 43 சம்பள நிர்ணயசபைகள் இருக்கின்றது. இதில் 12 சம்பள நிர் ணய சபைகளுக்கே சம்பள உயர்வு வழங்குவதற்கு இணக்கம் காணப்பட் டுள்ளது. 31 சம்பள நிர்ணய சபை களுக்கு சம்பள உயர்வு தொடர்பாக பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

இதன்படி தனியார்துறை ஊழி யர்களுக்கு ரூ.1250 முதல் 3000 வரை சம்பள உயர்வு வழங்கப்பட வுள்ளது. என தொழில்அமைச்சர் தெரிவித்தார். (01)

# துணைவேந்தர்...

வகையில் நியமனம் வழங்கியமை, ஊழியர் சங்கம் மேற்கொண்ட வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்ட ஊழியர்களுக்கு சம்பளமற்ற விடுப்பு வழங்கல், தனியார் பாதுகாப்பு சேவை, தனியார் சுகாதார சேவை ஆகியவற்றை யாழ்.பல்கலைக்கழக பணிகளுக்கு அமர்த்தல், ஊழியர் கடன் வழங்கலில் மீண்டும் குளறுபடி கள் இடம்பெறுகின்றமையைத் தடுத்தல் வேண்டும். போன்ற கோரிக் கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டத்தில ஊழியர்கள் ஈடுபட்ட னர்.

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு பிரிவினர் மற்றும் நீர் விநியோக ஊழியர்கள் தவிர, ஏனைய அனைத்து ஊழியர்களும் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த மறியல் போராட்டத்தில் ஈடு பட்ட சிற்றூழியர் ஒருவரைப் பேரா சிரியர் ஒருவர் தகாத வார்தைக ளால் பேசியதுடன், அவரைத் தாக் கவும் முற்பட்டதாகவும், இம்மறியல் போராட்டம் தமது கோரிக்கைகள் ஏற் றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் வரை இடம்பெறுமென யாழ்.பல்க லைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

(ப.ச)

# பேச்சுக்கான அடித்தளமாக...

முன்னணி ஆகிய கட்சிகள் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்ததாக கருணாரட்ண தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

அரசியல் இணக்கப்பாடு இருக்கு மானால் மூன்று அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்ற நடவ டிக்கை சமாதான முயற்சியை முன் னெடுத்துச் செல்லுவதற்கு தடை யாக இருக்கமாட்டாது.

மூன்று அம்சங்களின் பேரில் ஜனாதிபதியுடன் புரிந்துணர்வு ஒன் றைச் செய்வதன்மூலம் சமாதான முயற்சி மீண்டும் ஆரம்பிக்கமுடியும்.

இனவாத இராணுவ சக்திகளு டன் கூட்டணியை ஆரம்பிக்கும் முயற்சி கைவிடப்படவேண்டும், விடு தலைப்புலிகளுடன் கைச்சாத்திடப் பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதானத்திற்கான ஒரு அம்சமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். என் றும், இடைக்கால நிர்வாகத்திற்கான விடுதலைப்புலிகளின் பிரேரணை யின் பேச்சுக்களுக்கான ஆரம்பப் படிக்கல்லாக ஏற்றுக்கொள்ளவேண் டும்.

இந்த அம்சங்களை வைத்து, ஜனாதிபதியுடன் உடன்பாட்டுக்கு வருமாறு பிரதம மந்திரிக்கு வேண்டு கோள் விடுத்துள்ளோம்.

இத்தகைய உடன்பாடு ஏற்படுமா னால் ஜனாதிபதியின் கீழ் பாது காப்பு அமைச்சு செயற்படுவது ஒரு தடையாக இருக்கமாட்டாது. ஜனாதி பதி தனது பலத்தை சமாதானத்தை அடைவதற்காக பயன்படுத்த வேண் டும்.

தேர்தல் ஒன்று ஏற்பட்டாலும் தற் போதைய அமைப்பு மாற்றம் அடை யாது என்றும், பிரதம மந்திரிக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

சமாதான முயற்சியை முன் னெடுப்பதற்கு அரசாங்கத்தின் பலப்பிர யோகம் போதுமானதாக இல்லை என்றும், கலாநிதி கருணாரட்ண மேலும் கூறினார்.


# பதவி வெற்றிடம்

☆ சிற்றூழியர் (ஆண்கள் மட்டும்)

☆ பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள் மட்டும்)

☆ பக்க வடிவமைப்பாளர் - Page Maker (இருபாலாரும்)

மேற்படி விண்ணப்பங்களுக்கு தகுதியானவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் சான்றுப் பத்திரங்களுடன் 'நமது ஈழநாடு' அலுவலகத்திற்கு கடமை நேரத்தில் நேரடியாகச் சமுகம் தரவும்.

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
இல, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.